# சாத்தானைப்பற்றிய உபதேசங்கள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 6

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

# முகவுரை

சாத்தானைப் பற்றிய உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் சந்திக்கும் விஷயங்களில் மிகவும் அதிக சர்ச்சைக்குரிய குழப்பம் நிறைந்த ஒன்றாகும். உபதேசங்களையோ, செயல்முறை களையோ சிந்தையில் ஒருபுறமாக சாய்ந்து கொள்ளும் நிலை கிறிஸ்தவத்தில் நிகழ்கிறது. இந்த பாடத்தைக் குறித்து, எழுதப்பட்ட தேவ வார்த்தை என்ன சொல்லுகிறது என்று கவனிக்காததால், அநேக வேளைகளில் கிறிஸ்தவர்கள் குற்ற உணர்வோடு இருக்கிறார்கள் என்பதே பரிதாபமான உண்மையாகும்.

விடுதலையாக்கும் ஊழியங்கள் என்றழைக்கப்படுபவைகளின் மத்தியில், தற்போது இருக்கும் செயல் முறைகளில் காணப்படும் தவறுகளை சுட்டிக்காட்டவே நாம் வகை தேடுகிறோம். முதலாவதாக, விடுதலையாக்கும் ஊழியம் என்பது, அதுமட்டும் தானாக பிரிந்திருக்கும்படி உண்டாக்கப்பட்டதல்ல. அவைகள், கிறிஸ்துவின் போதனை மற்றும் சுகமாக்கும் ஊழியத்தின் எல்லா அம்சங்களிலும் ஒன்று சேர்ந்து கூடவே நடைபெற வேண்டியதாகும். இந்த ஊழியம் தனிமைப்படுத்தப்படுவது சமச்சீர் நிலையற்ற தன்மைக்கு நடத்தியுள்ளது, மற்றும் சில நேரங்களில் பிசாசைக் குறித்த உணர்வுள்ளவர்களாக மாற்றிவிடும்.

விசுவாசிகள் என்ற நிலையில் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் அதிகாரத்தையும், தேவனைக் குறித்த உணர்வையும், இந்தப் புத்தகத்தின் மூலம் திரும்ப முந்தின சீரான நிலைக்கு கொண்டு வர நாடுகிறோம். சத்துருவின் தந்திரங்களைக் குறித்து நாம் அறியாதவர்கள் அல்லவே; இருந்தாலும் நாம் சாத்தானைக் குறித்த உணர்வுள்ளவர்களாய் இருக்க விரும்பவில்லை. தேவனுடைய வார்த்தையிலிருந்து தெளிவான போதனையின் மூலமாக, சத்துருவின் எல்லா தந்திரங்களைக் குறித்த விழிப்புணர்வோடு நாம் இருக்கும் சாத்தியத்துடன், இன்னும் தேவனைக் குறித்த உணர்வோடும் இருக்கலாம்.

சாத்தானை உங்கள் கால்களின் கீழ் மிதிக்கத்தக்கதான விளங்கிக் கொள்ளுதலை தேவன் உங்களுக்குத் தந்தருள்வாராக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 1*

# பிசாசுகளின் ஆரம்பம்

சாத்தான் மற்றும் பிசாசுகளின் ஆரம்பம், வேதாகமத்தில் சிதறப்பட்ட வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில வசனங்கள் ஏசாயாவிலிருக்கின்றன, சில எசேக்கியேலில் இருக்கின்றன, சில வெளிப்படுத்தின விசேஷத்திலும் மற்றும் சில சுவிசேஷங்களிலும் நிருபங்களிலும் இருக்கின்றன. இந்த அத்தியாயத்தில் இந்த எல்லா வசனங்களையும் ஒன்றாகக் கொண்டுவந்து, சாத்தானுடைய மண்டலத்தின் ஸ்தாபனம், அதன் தோற்றம் மற்றம் அதன் எல்லா சேனைகளையும் குறித்து, ஒரு முழுமையான படத்தைக் காண நாடுகிறோம். (கிறிஸ்தவர்களுக்கு சாத்தானின் மீது ஆளுகை இருக்கிறது என்பதை இந்த புத்தகத்தின் மூலம் காட்ட முயலுகிறோம்).

### *சாத்தானின் விழுகையும் அழிவும்*

சாத்தானை ஒரு கெட்ட உயிரியாக தேவன் படைக்கவில்லை. தேவன் சாத்தானை ஒரு பூரணமான, நல்ல உயிரினமாகத்தான் படைத்தார். சாத்தான் இதற்கு முன்பு லூசிபர் என்று அழைக்கப்பட்டான் (ஏசா. 14:12). 'லூசிபர்' என்ற பெயரின் அர்த்தம் 'மின்னும் ஒன்று' என்பதாகும். லூசிபர் பூரண அழகும் ஞானமும் நிறைந்தவன் (எசே. 28:12). அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப் (எசே. 28:14). கேருபீன்கள் தேவனுக்கு வெகு அருகில் வாசம்பண்ணும் சிருஷ்டிகள். உடன்படிக்கைப் பெட்டியானது, இரண்டு கேருபீன்களின் செட்டைகளினால் மூடப்பட்ட கிருபாசனத்தைக் கொண்டது (யாத். 25:22).

தேவதூதர்களும், கேருபீன்களும், மனிதர்களைப் போலவே தெரிந்தெடுக்கும் சுதந்தரத்தோடு சிருஷ்டிக்கப்பட்டவர்கள். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும்படியாக, தேவனுடைய கட்டளைகளை உலகமுழுவதிலும் இன்று தேவதூதர்கள் கொண்டு செல்கின்றனர். அவர்கள் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற கூற்று, அவர்கள் இயந்திர மனிதர்கள் அல்ல, ஆனால் சுயசித்தமுள்ள சிருஷ்டிகள் என்பதை அறிவுப்பூர்வமாக நிரூபிக்கிறது. அவன் தேவனை சேவித்த நமக்கு தெரியாத கால அளவிற்குப் பிறகு, தேவனைப் பற்றி தனக்கு எல்லாம் தெரியும் என்று லூசிபர் நினைத்தான். மற்ற சில தூதர்களுடைய ஒத்துழைப்போடு, தேவனை நீக்கிவிட்டு அவனே தேவனாக மாறிவிடலாம் என்று நினைத்தான் (ஏசா. 14:13, 14).

அப்படி நினைக்க அவனுக்கு தைரியம் எப்படி வந்தது என்று சில நேரங்களில் கேள்வி கேட்கப்படுகிறது. மனிதர்களிலும், நெருங்கிய நண்பர்களுக்குள் ஒரு நண்பருக்கு, மற்றவரைப் பற்றிய பலம், பலவீனம் எல்லாம் தெரியும் என்று நினைக்கும்போது, காட்டிக் கொடுத்தல் நிகழ்கிறது. இதை பல மடங்கு பெரிதாக்கிப் பார்த்தால், சாத்தான் எப்படி அதிகாரத்தை அபகரித்துக் கொள்ள முயற்சித்தான் என்கிற படம் கிடைக்கும். தேவன், சாத்தானோடு மிக நெருக்கமாக இருந்தார், மற்றும் லூசிபரோடு அவர் பல விசேஷமான வைகளை பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும். தேவனுடைய எல்லா பெலத்தையும், பெலவீனத்தையும் தான் தெரிந்து கொண்டதாக லூசிபர் நினைத்து, அவரை அப்புறப்படுத்தி விட்டு, தன்னை அங்கு வைக்க வகை தேடினான். இந்த பூமியில், இதையே இயேசுவிடமும் செய்ய முயற்சித்தான்.

தன்னுடைய பெருமையினால் மூன்றிலொரு பங்கு தூதர்களுடன், லூசிபர் எதிர்த்து நின்று முரட்டாட்டம் செய்தான் (எசே. 28:17; வெளி. 12:4). தேவன், லூசிபரை பரலோகத்திலிருந்து தள்ளி அழித்தார் (அதாவது எல்லா வல்லமையையும் அகற்றினார்) (எசே. 28:16). குற்றம் சாட்டுபவனாக, தேவனுடைய எல்லா செயல்களையும் எதிர்க்கும் சாத்தான் அல்லது பிசாசு என்று அறியப்பட்டவனானான். ஆதியாகமம் முதலாம்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்ட சிருஷ்டிப்பிற்கு முன்பதாகவே, இவைகள் எல்லாம் சம்பவித்துவிட்டன. ஆதியாகமம் 1:1க்கும் ஆதியாகமம் 1:2க்கும் இடைப்பட்ட காலமான ஆதாமுக்கு முந்தின நாகரீக காலத்தில், பூமியில், இது நடைபெற்றிருக்க சாத்தியங்கள் உள்ளன.

### *ஆதாமுக்கு முந்தின நாகரீக காலத்தில், சிருஷ்டிப்பின் இடைவெளி கோட்பாடுகள்*

ஆதாமுக்கு முந்தின நாகரீக காலத்தினுடைய சிருஷ்டிப்பின் இடைவெளிக் கோட்பாடுகள், பூமியானது பூரணமாய் சிருஷ்டிக்கப்பட்டது என்ற இந்த கூற்றின் அடிப்படையில் உண்டானது (ஆதி. 1:1). அது 'ஒழுங்கின்மையும் வெறுமையும் ஆனது' (ஆதி. 1:2 எபிரேய வார்த்தை *டோஹு வா போஹு tohu wa bohu; டோஹு – தரிசான (அ) பாழான; போஹு – வெறுமை (அ) ஜீவன்கள் இல்லாத);* மற்றும் 'இருள்' (எபிரேய பதம் *ஹஷேக் hashek – முற்றிலும் வெளிச்சமே இல்லை)* 'ஆழத்தின்' மேல் இருந்தது (எபிரேய பதம் *டேஹாம் tehom – படுகுழி).* தேவன் பூமியை 'வெறுமையாயிருக்க' சிருஷ்டிக்க**வில்லை** என்று ஏசாயா 45:18 கூறுகிறது (எபிரேய பதம் *டோஹு வா போஹு).* லூசிபர் கலகம் விளைவிக்கும் முன்பு, அவனுடைய ஆளுகையின் கீழிருந்த ஆதாமுக்கு முந்தின நாகரீக காலம், பல லட்சக்கணக்கான ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும். அது ஆதியாகமம் 1:1க்கும் ஆதியாகமம் 1:2க்கும் இடைப்பட்ட காலம் (குறிப்பு: எசேக்கியேல் 28:13–14ல் விவரிக்கப்பட்ட லூசிபரின் நாட்களிலிருந்த ஏதேன் தோட்டம், ஆதாமின் நாட்களிலிருந்த ஏதேன் தோட்டத்தை விட வித்தியாசமாக இருந்தது. அது விலையேறப் பெற்ற கற்களால் நிறைந்திருந்தது).

மேலும், *டோஹு* மற்றும் *போஹு* என்ற வார்த்தைகள் ஏதோமின் விழுகையையும் அழிவையும் விவரிக்கப் பயன்பட்டன (ஏசா. 34:11 …அதின்மேல் வெட்டவெளியின் நூலையும், *டோஹு* வெறுமையின் தூக்கையும் பிடிப்பார் – *போஹு*). எரேமியா தீர்க்கதரிசி இஸ்ரவேலின் அழிவை *டோஹு வா போஹு* என்று குறிப்பிடுகிறார் (எரே. 4:23 பகுதியாக நேபுகாத்நேச்சாரின் கீழ் நிறைவேற்றப்பட்டது). ஆதாமுக்கு முந்தின நாகரீகம் அழிக்கப் பட்டதின் மூலம் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறினதற்கு அதிகமான சாத்தியம் உண்டு; அது ஆதியாகமம் 1:2ல் உள்ளது. 'சிருஷ்டி' என்ற பதம் தெரிந்தெடுக்கப்பட்ட வார்த்தையாக பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதி. 1:1 எபிரேய பதம் *பாரா – ஒன்றுமில்லாமையிலிருந்து;* இன்னும் ஆதி. 1:21; 2:3, 4; 5:1, 2லும் காணப்படுகிறது). இந்த வார்த்தை 'உண்டாக்கினார்' என்ற வார்த்தையிலிருந்து வித்தியாசப்படுகிறது (ஆதி. 1:7 எபிரேய பதம் *'asah' அஸா – முன்பு இருந்த பொருட்களால் திரும்ப உருவாக்கப்பட்டது.* இன்னும் ஆதி. 1:16, 25, 26, 31; 2:2, 3, 4, 18; 3:1, 7, 21 லும் காணப்படுகிறது). குறிப்பாக ஆதாம் கால பூமியை ஏழு நாட்களில் திரும்ப உருவாக்கின இடத்தில்.

### *ஆதாமின் விழுகை*

சாத்தான் விழுந்த எல்லையற்ற காலத்திற்கு பின்பு, தேவன் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்தார். இந்த பூமியின்மேல், தேவனை ஆதாமுக்கு சகல அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்தார் (ஆதி. 1:26–28). ஆதாமின் அதிகாரம், தேவனுடைய சிங்காசனத்திற்கு போகும் வாய்ப்பையும் உள்ளடக்கியது. அவன் தேவனை எளிதாக அணுக முடிந்தது. சாத்தான் தோட்டத்திற்குள் பதுங்கி நுழைந்து, ஆதாமை சோதனையின் மூலம் கீழ்ப்படுத்தினான். தன்னுடைய அதிகாரத்தை உபயோகப்படுத்த வேண்டிய ஆதாம், சாத்தானின் சூழ்ச்சியில் விழுந்துவிட்டான். ஆதாம் தன்னுடைய எல்லா உரிமைகளையும் சிலாக்கியங்களையும் அதிகாரங்களையும் சாத்தானிடம் இழந்துவிட்டான்.

இயேசு சோதிக்கப்பட்டபோது, எல்லா அதிகாரங்களும் தனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கின்றன என்ற கூற்றை சாத்தான் குறிப்பிடுகிறான் (லூக். 4:6). ஆதாம்தான்,

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

தன்னுடைய அறியாமையினால் எல்லாவற்றையும் அவனுக்கு ஒப்புக்கொடுத்தவிட்டான். ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் ஒன்றுமில்லாதவனாய் நுழைந்தான். ஆனால், ஆதாமுக்குள்ள எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேறினான். ஆதாமின் விழுகையிலிருந்து, இந்த பூமியின்மேல் எல்லா அதிகாரத்தையும் சாத்தான் பெற்றுக்கொண்டான், மற்றும் தேவனிடத்திற்கு போகும் வாய்ப்பையும் ஆதாமுடைய அதிகாரத்தின் மூலம் பெற்றுக்கொண்டான். அவன், இந்த வாய்ப்பை தாராளமாய் பயன்படுத்தி, குற்றம்சாட்டுபவனாய் வேலைசெய்கிறான் (யோபு 1:5–12; வெளி. 12:10).

இந்த பூமி, ஆதாமுக்கு குத்தகை ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்பது தெளிவான ஒன்று. அது ஆறாயிரம் வருட குத்தகை ஒப்பந்தமாக இருக்க சாத்தியமுண்டு. ஆனால், அந்த கொள்கையைக் குறித்து நாம் பிடிவாதமாக இருக்க வேண்டியதில்லை. இந்தக் காரணத்தினால், இந்த பூமியின் ஒப்பந்த காலம் ஒருநாள் முடிந்து, தங்கள் நாட்கள் எண்ணப்படும் நிலை வரும் என்று சாத்தானின் பிசாசுகள் அறிந்திருக்கின்றன. இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டதை பார்த்தபோது, அந்த ஒப்பந்தம் இன்னும் முடிவடையவில்லை என்று ஆச்சரியப்பட்டன. காலத்துக்கு முன் தங்களை உபத்திரவப்படுத்த ஏன் அவர் வந்தார் என்று அவைகள் அவரைக் கேட்டன (மத். 8:29).

*வானமண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகள்*

எபேசியர் நிருபம் பிசாசின் நான்கு வகைகளைக் குறித்துப் பேசுகிறது. அவைகளின் பதவி தரம், ஏறு வரிசையில் பட்டியலிடப்பட்டிருக்கின்றன; துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகள், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் (எபே. 6:12). விழுந்துபோன தூதர்கள், பிசாசினுடைய சேனைகளின் உயர்ந்த தரமானார்கள். அவைகள்தான் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள். வானமண்டலங்கள் என்பது பூமியின் மேலுள்ள காற்று மண்டலத்தைக் குறிக்கும். இவைகள் பூகோள பகுதியின் மேல் உள்ள அதிபதிகள். பிரதான தூதனாகிய காபிரியேலை தடை செய்ய தைரியம் வாய்ந்த பிசாசின் அதிகாரங்கள் (தானி. 10:13).

விழுந்துபோன தூதர்கள், இந்த பூமியின்மேல் வசிக்க விரும்புவதில்லை. இந்த பூமிக்கு மேல் உள்ள காற்று மண்டலத்தில் தங்கள் சிங்காசனங்களை வைத்துள்ளன. இந்தக் காரணத்தினால்தான் அவைகள் வானமண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகள் என்று அழைக்கப்படுகின்றன. பிசாசின் வேலையைச் செய்வதற்கு மட்டுமே அவைகள் பூமிக்கு வருகின்றன. ஆனால், தங்கள் வேலையை முடித்துவிட்டு, வானமண்டலத்தில் உள்ள சிங்காசனங்களுக்கு திரும்ப பறந்துவிடுகின்றன. உலகத்தின் நிகழ்வுகளையும் தேசங்களின் அரசியல் காட்சிகளையும் உருவமைப்பதில் முக்கிய பங்காற்றும், சாத்தானின் சண்டை போடும் அசுத்த ஆவிகள்தான் இவைகள்.

*மனிதனும் தூதர்களும் தீட்டுப்படுதல்*

இந்த விழுந்துபோன தூதர்களில் சிலருக்கு, மனுஷகுமாரத்திகளோடு கூடும் வேலை கொடுக்கப்பட்டது (ஆதி. 6:1–4). சில அறிஞர்கள் 'தேவகுமாரர்' என்னும் பதத்தை 'சேத்தின் குமாரர்' என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். 'தேவகுமாரர்' சேத்தின் குமாரர்தான் என்று வாதிட, இது மற்ற வேத வாக்கியங்களால் ஆதரிக்கப்படாத வாதமாக இது அமையும். மேலும் அது, மரபணுக்களின் அடிப்படையில் பரிசுத்தம் இருக்கிறது என்று கூறுவதைப்போலிருக்கும்.

'தேவகுமாரர்' என்னும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் நான்கு முறைகள் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன (ஆதி. 6:2; யோபு 1:6; 2:1; 38:7). இந்த சொற்றொடர் யோபின் புத்தகத்தில் மூன்று முறைகள் தூதர்களைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. மற்ற வேத

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வாக்கியங்களின் சாட்சிகளினால், ஆதியாகமத்தில் உள்ள இந்த சொற்றொடர் தூதர்களையும் குறிக்கிறது. பேதுரு தன்னுடைய நிருபத்தில், பாவஞ்செய்த தூதர்கள் தற்சமயம் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருப்பதைப் பேசுகிறார் (2 பேது. 2:4, 5). தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள், இப்பொழுது அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டப்பட்டிருப்பதைக் குறித்து யூதாவும் பேசுகிறார் (யூதா 6). சோதோம் கொமோரா மக்கள் எப்படி பாவம் செய்தார்களோ, அப்படியே அவர்களும் செய்தார்கள் என்று பேசுகிறார் (யூதா 7).

தெளிவாக, இந்த விழுந்துபோன சிலதூதர்கள் பெண்களோடு கூடி, குழந்தை பெறும் திறமைபடைத்தவர்கள். இந்த தனிப்படுத்தப்பட்ட கூட்டம், நியாயத்தீர்ப்பு நாளிற்கு முன்பதாகவே சங்கிலிகளினால் கட்டப்பட்டு விட்டார்கள். இந்த கலப்பட உறவின் மூலம் பிறந்த குழந்தைகள் இராட்சதர்களாய் இருந்தனர். அவர்கள் மனிதர்களுமில்லை, தூதர் களுமில்லை. இந்த முக்கியமான நிகழ்வினால்தான், ஆதாமின் சுத்தமான வாரிசுகளான நோவாவையும் அவன் குடும்பத்தையும் தவிர பூமியில் எல்லாவற்றையும் அழிக்க, தேவன் நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார்.

பூமி அழிக்கப்பட்டபோது, எல்லா மாம்சமும் மரித்துவிட்டன. விழுந்துபோன மனிதர்களின் ஆத்துமாக்கள் பாதாளத்திற்குப் போய், நியாயத்தீர்ப்பு நாளுக்கு காத்துக்கொண்டு இருக்கின்றன. ஆனால், தூதர்களும் மனிதர்களும் கலந்த பாதிக் கலப்பின் நிலை என்ன? இந்த பாதி கலப்பினத்தின் சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஆவிகள், பிசாசின் மற்ற வகைகளாக மாறியிருக்க சாத்தியமுண்டு. சில அறிஞர்கள், மற்றவகை பிசாசுகள், ஆதாமுக்கு முந்தின உலகத்திலிருந்து வந்தன என்ற சொல்கின்றனர். அதற்கும் சாத்தியம் இருக்கிறது. இந்தக் கொள்கைகளைக் குறித்து நாம் பிடிவாதமாயிருக்க அவசியமில்லை. ஆனால், மேலுள்ள கோட்பாடுகள், பிசாசுகளின் தோற்றத்தைப் புரிந்துகொள்வதினால் நமது அறிவாற்றலை திருப்தி செய்ய உதவி செய்யும்.

*பிசாசுகளை வகைப்படுத்துதல்*

சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த ஆவிகள், தங்களை வெளிப்படுத்த மனித உடல்களைத் தேடி, இந்த பூமியில் அலைந்து கொண்டிருக்கின்றன. அவைகள் விழுந்து போன தூதர்களைப்போல் இல்லை. இந்த சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஆவிகள், தங்கள் தலைமையகத்தை வெளி (அ) காற்றுமண்டலத்தில் வைத்துக்கொள்வதில்லை. அவைகள் மனித உடல்களைப் பிடித்துக்கொள்ள விரும்புகின்றன. அவைகள் அமைப்பிலும், உருவத்திலும், உயரத்திலும், தோற்றத்திலும், அதிகாரத்திலும் வித்தியாசப்படுகின்றன. சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த ஆவிகள்தான், உயர் பதவியில் இருக்கும் இப்பிரபஞ் சத்தின் அந்தகார லோகாதிபதிகள் (எபே. 6:12). இவைகள்தான் மனிதனின் ஆத்துமாவை ஆட்கொள்ள திட்டமிடும் கைதேர்ந்த பிசாசின் வல்லமைகள். ஒரு மனிதனுக்கு அநேக பிசாசுகள் பிடித்திருந்தாலும், பொதுவாக ஒரே ஒரு பெரிய குழுதலைவன்தான் இருப்பான், அவன்தான் இப்பிரபஞ்சத்தின் ஒரு அந்தகார லோகாதிபதி.

லேகியோன் பிசாசுகள் பிடித்த மனிதனின் விஷயத்தில், ஆறாயிரம் பிசாசுகள் இருந்தாலும், ஒரே ஒரு அந்தகார லோகாதிபதிதான் அவைகளைத் தலைமை தாங்கினான். இயேசு அவனுடைய பெயரை கேட்டபோது அவன், (ஒருமை) லேகியோன் என்பது தன்னுடைய பெயர் என்றான் (மாற். 5:9). இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள், அநேக பிசாசுகள் பிடித்த மனிதரை விடுதலையாக்க அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஆட்கொள்ளும் குழுவின் தலைவனாகிய முக்கிய பிசாசை விரட்டினால், மற்ற எல்லாம் தானாக வெளியே வரும்.

நாம் ஒவ்வொரு பிசாசையும் தனித்தனியாய் விரட்ட வேண்டியதில்லை. ஒரு நபருக்கு ஆறாயிரம் பிசாசுகள் பிடித்திருந்தால், ஒரு நாளைக்கு மூன்று என்று விரட்டினாலும்,

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

ஒவ்வொரு நாளும் பிசாசு விரட்டும் வேலை செய்தாலும், எல்லா பிசாசுகளையும் விரட்ட கொஞ்சம் குறைய ஆறுவருடங்கள் ஆகும். ஆயினும், தலைமை பிசாசின் மீது நாம் அதிகாரம் எடுத்து, அவனுடைய எல்லா குழுவோடும் வெளிவர அவனுக்கு கட்டளை கொடுத்தால், அந்த நபரை அதே இடத்தில் விடுதலையாக்கிவிடலாம். இந்த யுகத்தின் அந்தகார லோகாதிபதிகள்தான், சோதனையிலும் ஆட்கொள்வதிலும் சம்மந்தப்படும் முக்கிய பிசாசுகள் ஆகும். மற்ற இரண்டு வகையான பிசாசுகளான, துரைத்தனங்களும், அதிகாரங் களும் குறைவான வல்லமை படைத்தவை. இவைகளில் சில சின்ன குட்டிச்சாத்தான்களைப் போலிருக்கும். அவைகளுக்கு குறைவான வல்லமை இருந்தாலும், அவைகள் ஒரு நபரின் வாழ்வில், கவனச்சிதறலையும் எரிச்சலையும் உண்டாக்கும் பிசாசின் வேலையைச் செய்யும்.

*சாத்தானின் நியாயத்தீர்ப்பு*

இயேசு இந்த பூமியில் வந்ததின் நோக்கம், நம்முடைய பாவங்களுக்காக மரிப்பது மட்டும் அல்ல, பிசாசின் கிரியைகளை அழிக்கவும் அவர் வந்தார் (1 யோவா. 3:8). ஒரு மனிதனாய் பிசாசை அழிப்பதற்கே இயேசு மனிதனாய் வந்தார். மற்றும் மனிதனுக்கு நியாயப்படி சேர வேண்டிய எல்லா அதிகாரங்களையும் திரும்பப் பெற்றுத்தரவும் வந்தார். சிலுவையில் மரித்ததின் மூலம், மனிதனுடைய கீழ்ப்படியாமைக்கு சட்டப்படி செலுத்த வேண்டிய கிரயத்தை செலுத்தினார். எனவே, பூமியின் மீது எல்லா அதிகாரத்தையும் எடுத்துக்கொள்ள அவருக்கு சட்டபடி உரிமை இருக்கிறது.

சிலுவையிலே சாத்தான் நியாயந்தீர்க்கப்பட்டான் (யோவா. 12:31; 16:11). சாத்தான் இந்த பூமியின் மீது சட்டப்படி வைத்திருந்த பிடி உடைக்கப்பட்டு, சாத்தான் தள்ளப்பட்டுவிட்டான் (யோவா. 12:31). இப்பொழுது அவன் ஒரு தள்ளப்பட்டவன். தம்முடைய மரணத்தில் இயேசு பிசாசை அழித்தார் (எபி. 2:14). 'அழித்தல்' என்ற வார்த்தையின் பொருள் 'செயலிழந்து போகச்செய்தல்' (கிரேக்க பதம் katargeo – கடர்ஜியோ). சாத்தான் முழுவதும் வல்லமையற்ற வனாக மாற்றப்பட்டான். மற்றும் ஆதாமிடமிருந்து பறித்துக்கொண்ட எல்லா சட்டப் பூர்வமான அதிகாரங்களிலிருந்தும் உரிந்துகொள்ளப்பட்டான்.

மரணத்தின் மீதும் பாதாளத்தின் மீதுமுள்ள எல்லா ஆளுகையையும் சாத்தான் இழந்து விட்டான் (வெளி. 1:18). பூமியின் மீதும், வானமண்டலங்களிலும் அவன் ஆளுகையை இழந்து போனான் (மத். 28:18). இயேசு பிசாசின் எல்லா துரைத்தனங்களையும் உரிந்து கொண்டு அவனை வெளியரங்கமான கோலமாக்கினார் (கொலோ. 2:15). வானம், பூமி, நரகம் ஆகியவற்றில் உள்ளவை யாவும் இயேசுவின் கட்டுப்பாட்டிற்கு கீழ் கொண்டு வரப்பட்டன (எபி. 2:8; 1 கொரி. 15:24–28; எபே. 1:22). பிசாசின் எல்லா சேனைகளின் மேல் மாத்திரமல்ல, சாத்தான் மீதும், எல்லா விசுவாசிகளுக்கும் அதிகாரம் இருக்கிறது (மாற். 16:17; யாக். 4:7, 8).

இன்றைய நாட்களில், சாத்தான் செயல்படும் மாயையான அதிகாரம், வஞ்சகத்தின் அடிப் படையிலானது. யாராவது ஒருவர், உங்கள் வீட்டின் மீதும், சொத்தின் மீதும் உரிமை இருக்கிறது என்று உங்களை நம்பவைக்க முடியுமானால், நீங்கள் அதை அவருக்கு ஒப்புக் கொடுத்துவிடுவீர்கள். ஒரு எலும்பும் தோலுமான வான்கோழி, தன்னை பார்ப்பவர்களுக்கு தான் இருப்பதைவிட தன்னைப் பெரிதாய் காட்ட தன் தோகைகளை விரிப்பதைப்போல சாத்தானும் இருக்கிறான். ஆனாலும், விசுவாசிகள் இயேசுவின் பெயரைச் சொன்ன மாத்திரத்தில், தன் தோகைகளை சுருக்கிக் கொண்டு, நிர்வாணமாய், வழியெல்லாம் பெண்கோழியைப்போல் கொக்கரித்துக் கொண்டே ஓடிப்போவான்.

நாம் பிசாசிற்கு எதிர்த்து நின்றால், அவன் நம்மிடமிருந்து ஓடிப்போவான் (யாக். 4:7). 'ஓடிப்போவான்' என்ற வார்த்தை கிரேக்க பதமான 'pheusetai' பியுசேடாய் என்ற வார்த்தையிலிருந்து வந்தது. அந்த வார்த்தை மூல வார்த்தையான் 'pheugp' பியூகோ – விலிருந்து வந்தது. 'பியூகோ' என்ற வார்த்தையின் பொருள் 'சுருங்குதல் அல்லது தனியாய் பயத்தடன் நிற்றல்' (மத். 8:33). நாம் அவனைக் குறித்து பயப்படுவதை விட, சாத்தான்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நம்மைக் குறித்து அதிகமாய் பயப்படுகிறான். நீங்கள் உங்கள் நிலையிலிருந்து சாத்தானை எதிர்க்கும்போது, உங்களிடமிருந்து பயங்கரம் வந்தது போல ஓடிப்போவான். அவன் உங்களால் பயமுறுத்தப்படுகிறான். சாத்தானை நம்முடைய காலின் கீழே நசுக்கிப் போட தேவன் விரும்புகிறார் (ரோம. 16:20).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 2*

# பிசாசின் ஆதிக்க நிலைகள்

சாத்தானுக்கு கீழ் உள்ள எல்லா பிசாசின் சக்திகளும், இந்த உலகத்தை கட்டுப்படுத்தி ஆட்கொள்ள வகை தேடுகின்றன. தங்களுக்கு கொஞ்ச காலம் மாத்திரமே உண்டென்று அறிந்த பிசாசுகள், தங்களுடைய நியாயத்தீர்ப்பிற்கு முன்பு, தங்களால் இயன்ற மட்டும் அழிக்க முயற்சிக்கின்றன. அவர்களுடைய நியாயத்தீர்ப்பு நரக அக்கினிதான். ஏனென்றால், அவைகள் சோதிக்கப்படாமலே, தங்கள் சுய தெரிந்தெடுப்பின்படி விழுந்துபோயின. தேவனுடைய பரிசுத்த காரியங்களை ஆழமாய் அறிந்து, அவருக்கருகில் இருந்து அவரை சேவித்த பின்பு, அவைகள் விழுந்து போயின. தேவனுடைய ஆழமான காரியங்களை அறிந்த பின்பு, கர்த்தரை மறுதலிக்க தெரிந்துகொள்வார்களானால், மனிதர்களும் கூட இதே நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள் (எபி. 6:4–6; 10:26–29).

அக்கினிக் கடல் மனிதர்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டதல்ல. அது சாத்தானுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது (மத். 25:41). அசுத்த ஆவிகள் தங்கள் பொல்லாப்பினால், மனித ஆத்துமாக்களையும் தங்களுடன் அக்கினிக் கடலுக்கு கொண்டு செல்ல நாடுகின்றன.

### *உலக நிகழ்வுகளில் பிசாசின் செல்வாக்கு*

வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள், உலகத்தின் நிகழ்வுகளை பாதிக்கச் செய்கின்றன. இயற்கையான உலகத்தில் யோசுவா யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, தேவன் ஒரு தேவதூத சேனையை யோசுவாவுக்காக யுத்தம் பண்ணும்படி அனுப்பினார் (யோசு. 5:13–15). கானானியர்கள் வெளியேற்றப்படுவதைப் போலவே, கானான் தேசத்தை ஆளுகை செய்யும் பொல்லாத ஆவிகளும் வெளியேற்றப்பட வேண்டும். பொல்லாத ஆவிகள் வெளியேற்றப்படாவிட்டால், மனிதர்களை வெற்றிகரமாக வெளியேற்ற முடியாது.

தானியேல், இருபத்தோரு நாட்கள் உபவாசித்தபோது, பிரபஞ்ச மண்டலத்தில் ஒரு ஆவிக்குரிய போராட்டம் நடந்தது. பெர்சிய தேசத்தின் அதிபதி என்றழைக்கப்படும் பொல்லாத ஆவி, காபிரியேலை எதிர்த்து நின்றது (தானி. 10:13). அப்பொழுதுதான் பிரதான தேவதூதனாகிய மிகாவேல், அந்த யுத்தத்தில் சேர்ந்து, காபிரியேலை விடுவித்து தானியேலிடம் அனுப்பினான். இராஜாவாகிய கோரேஸ், பெர்சியாவை அரசாண்ட காலத்தில், இந்த ஆவிக்குரிய சம்பவம் நடந்தது (தானி. 10:1).

பெர்சியாவின் அதிபதியோடே யுத்தம்பண்ண நான் திரும்பி போகிறேன் என்று காபிரியேல் சொல்கிறான் (தானி. 10:20). பெர்சிய தேசத்து அதிபதியை அவன் தோற்கடித்த பின்பு, இயற்கையான பெர்சிய இராஜ்ஜியம் விழும். அதே நேரத்தில், கிரேக்க தேசத்தின் அதிபதி என்றழைக்கப்படும் பொல்லாத ஆவி எழும்புவான் (தானி. 10:20). அவன் எழும்பும் போது, மகா அலெக்சாண்டரின் கீழ், கிரேக்க சாம்ராஜ்யமும் எழும்பும்.

இயற்கை உலகம், ஆவிக்குரிய உலகத்தின் சரியான பிரதி நகலாகும். சில உலக நிகழ்வுகள் பிசாசினுடைய செய்கைகளின் வெளிப்பாடாகும். மற்ற உலக நிகழ்வுகள், பரிசுத்தவான்களின் ஜெபத்தினால், தேவதூதர்கள் குறுக்கிட்டு தடுத்ததின் விளைவுகள் ஆகும். இயேசுவின் நாட்களில் பெத்லகேமிலே மேசியா பிறப்பார் என்னும் தீர்க்கதரிசனம் நிறைவேற, தேவதூதர்கள் ஒழுங்குபண்ணின ஒரு நிகழ்ச்சியே, ரோமர் காலத்து குடிமதிப்பு சட்டம் என்று நான் விசுவாசிக்கிறேன். (லூக். 2:11).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*மனிதர்கள் மேல் பிசாசின் ஆதிக்கம்*

பிசாசுகள் மூன்று முக்கிய பகுதிகளில் மனிதர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆதிக்கம் (அ) சரீரத்தை துன்புறுத்துவது பிசாசின் ஒடுக்குதலாகும். மனிதனின் ஆத்தமாவின் மேல் ஆதிக்கம் செலுத்துவது, உணர்வுகளை பிசாசு ஆக்கிரமித்தலாகும். மனிதனின் ஆவியின் மேல் ஆதிக்கம் செலுத்துவது பிசாசு பிடித்தலாகும். சில சமயங்களில் மக்கள் இந்த வார்தைகளை மாற்றி உபயோகித்து, கிறிஸ்தவர்களின் மனதில் குழப்பத்தை உண்டாக்குகின்றனர்.

வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களை, பிசாசினால் ஒடுக்கப்பட்டவர்கள் என்று வேதம் சொல்லுகிறது (அப். 10:38). பிசாசினால் ஒடுக்கப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் இயேசு சுற்றித்திரிந்தார். குருட்டுத்தன்மையையும், செவிட்டுத் தன்மையையும் மற்ற எல்லா சரீர பெலவீனங்களையும் அது உண்டாக்குகிறது. எல்லா வியாதிகளும், பிசாசினால் நேரடியாக வருவதில்லை. அஸ்திபார சத்தியங்கள் என்ற இந்தத் தொடரின், மூன்றாவது தொகுப்பில் காண்பது போல, சில வியாதிகள் இயற்கையான காரணங்களினால் வருகின்றன. எனினும் பிசாசினால் வரும் வியாதிகளை இயற்கையான முறையில் கண்டு பிடிக்கவோ, குணப்படுத்தவோ இயலாது. பிசாசுகள் சரீரத்திலிருந்து துரத்தப்பட்டால் மட்டுமே, அப்படிப்பட்ட வியாதிகள் சுகமாகும்.

ஆத்துமாவின் மீதும், சிந்தனை வாழ்க்கையின் மீதும் பிசாசு செய்யும் வேலை, உணர்வு களை ஆட்டிப்படைத்தல் என்று வரையறுக்கப்படுகிறது. மனச்சோர்வினாலும், மன வருத்தத் தினாலும், ஆத்துமாவின் உணர்வுகளை, பிசாசு தாக்க முடியும். ஆத்துமாவின் சித்தத்தை அடக்குவதின் மூலம் அவைகள் தாக்குகின்றன. ஆயினும், ஆத்துமாவின் மேல் சாத்தான் செய்யும் எல்லா வேலைகளையும், உணர்வுகளை ஆக்கிரமித்தல் என்று வகைப்படுத்தலாம். எனவே முடிவில் கிடைக்கும் விளைவு, அந்த நபர் ஒரு தவறான எண்ணத்தினாலோ அல்லது கருத்தினாலோ ஆக்கிரமிக்கப்படுகிறார்.

ஒரு நபர் வெறும் ஒரே ஒரு எண்ணத்தின் மூலம் பிசாசின் வல்லமையினால் கட்டப்பட முடியும். அந்த எண்ணம் ஒரு அரணாக மாறி, அந்த நபரின் வாழ்வையே உரிந்து போட்டு விடும் (2 கொரி. 10:4, 5). 'புல்லிங் டவுன் ஸ்டார்ங்ஹோல்ட்ஸ்' (Pulling Down Strongholds) என்ற புத்தகத்தில் ஜான் ஆஸ்டீன், தன் சகோதரி மேரி சுகமானதைக் குறித்து பகிர்ந்து கொள்கிறார் (பக்கம் 14–17). அவள் ஒரே எண்ணத்தினால் கட்டப்பட்டிருந்தாள் – தேவன் வியாதியை அனுப்பினார் என்பதே அது. அந்த எண்ணத்தை அவள் புறக்கணித்தபோது, உடனடியாக அவள் விடுவிக்கப்பட்டாள். வாழ்நாள் முழுவதும், மருத்தவமனைக்குள்ளேயும் வெளியேயும் பட்ட கஷ்டங்கள், அவள் விடுதலையாக்கப்பட்ட அன்றே முடிவுக்கு வந்து விட்டன.

மாய வித்தைக்காரனாகிய சீமோன், அவனுடைய இருதயத்தின் எண்ணங்களினால், அநீதியினால் கட்டப்பட்டிருந்தான் (அப். 8:22, 23). அந்த தவறான எண்ணங்களே அவனுடைய தவறான வேண்டுகோளுக்கு வழிநடத்திற்று. ஜீவனிலும், ஆத்துமாவிலும் உள்ள அடிமைத்தனம், எண்ணங்களிலுள்ள அடிமைத்தனத்திலிருந்து வருகிறது. அனனியாவும், சப்பீராளும் வஞ்சிக்கிற எண்ணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தார்கள் (அப். 5:3–5).

பிசாசு பிடித்தக்கொள்வது என்பது, மனிதனின் ஆவி முற்றிலும் கீழ்ப்படுத்தப்பட்டதாகும். இந்த நிலையில் ஒரு மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவற்றின்மேலும் முழு ஆளுகை எடுத்துக்கொள்ளப்படுகிறது. மனித ஆத்துமாவின் உண்மையான ஆள்தத்துவம் அடக்கப்பட்டு, அசுத்த ஆவி பிடித்த மனிதரைப்போல பிசாசின் ஆள்தத்துவம் மட்டும் வெளி வரும் (மாற். 5:1–5).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

### *பிசாசினுடைய ஆதிக்கத்தின் கீழ் கிறிஸ்தவர்கள்*

கிறிஸ்தவர்களைப் பிசாசு பிடிக்குமா என்பதுதான் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி. எனக்கு இது பொதுவான வரையறை அல்லது வாக்கிய அமைப்பு பற்றிய கேள்வியாகும். கிறிஸ்தவர்கள் பிசாசினால் பிடிக்கப்படக் கூடும் என்று நம்பும் கிறிஸ்தவர்கள், ஆவி ஆத்துமா சரீரத்தைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு பிசாசின் ஆதிக்கத்தையும் பிசாசு பிடித்தல் என்று வரையறுக்கிறார்கள். அவர்கள் பிசாசு ஆதிக்கம் செய்யும் இந்த ஒவ்வொரு பகுதியையும் வித்தியாசப்படுத்தமாட்டார்கள். ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் குரல் நாண் மூலம் பிசாசு பேசும் வரை, அவர்கள் அதை பிசாசு பிடித்தல் என்று வகைப்படுத்துவார்கள்.

கிறிஸ்தவர்கள் பிசாசினால் பிடிக்கப்பட முடியும் என்று நம்பாதவர்கள், கிறிஸ்தவனுக்கு பிசாசு இருக்க முடியும் அல்லது பிசாசின் தாக்கம் இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் கட்டுப்படுத்தப்படுவதை முறையே பிசாசுபிடித்தல், ஆக்கிரமித்தல், ஒடுக்குதல் என்று வரையறுக்க நான் விரும்புகிறேன். இறையியல் நுணுக்கத்திற்காக இப்படி செய்யப்படுகிறது.

ஒரு கிறிஸ்தவனின் ஆவி பிசாசினால் பிடிக்கப்படுகிறது என்ற கூற்றை ஏற்றுக் கொள்வது வேதத்திற்கு ஒவ்வாது. உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர் என்று வேதம் சொல்லுகிறது (1 யோவா. 4:4). எல்லா கிறிஸ்தவர்களின் புதிய பிறப்பின் ஆவிகளுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாழ்கிறார் (எசே. 36:26, 27). பாவத்தின் மூலமும், கீழ்படியாமையின் மூலமும், வாசலைத் திறந்து வைக்கும்போது, ஒரு கிறிஸ்தவனின் ஆத்துமாவையும், சரீரத்தையும் மட்டுமே பிசாசு கட்டுப்படுத்துகிறது. உண்மையான கிறிஸ்தவர்கள் மூலம் வெளிப்படும் சாத்தானின் அலைக்கழிப்புகள் அல்லது விடுதலையின் அறிகுறிகள் என்றழைக்கப்படும் வாந்தி எடுத்தல், செரிமானம் ஆகாத உணவு வெளியே தள்ளப்படுதல் எல்லாம் கீழ்க்கண்டவைகளால் நடைபெறுகிறது: 'விடுதலை' ஊழியர்களினால் பாதி வசப்படுத்தப்பட்ட நிலையில் உண்டாகும் உளவியல் தூண்டல், சில நேரங்களில் சரீரசம்மந்தப்பட்ட மற்றும் இயற்கை காரணங்கள், மற்றும் அபூர்வமான சந்தர்ப்பத்தில், தூரத்திலிருந்து சாத்தான் உண்மையாகவே அந்த வெளிப்பாட்டைத் தூண்டுவான் (அந்த நபருக்குள் இருக்க வேண்டிய அவசியமில்லை). இந்த எல்லா சம்பவங்களிலும், 'விடுவிக்கப் படவேண்டியவர்' அவருக்கு சொல்லப்படும் எல்லாவற்றையும் நம்பவும், கட்டளைகளுக்கு எளிதில் கீழ்படியவும் முதலில் கற்றுக்கொடுக்கப்படுகிறார்.

ஒரு கிறிஸ்தவன் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பிசாசினால் பிடிக்கப்படுவது, ஆரோக்கிய மான இறையியலில் சாத்தியமாக ஒரே வழி, அவர் முதலில் கிறிஸ்துவை மறுதலித்து அவிசுவாசியாக மாறுவதனாலேயே. ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை மறுதலிக்கும் சாத்தியத்தை வேதம் அங்கீகரிக்கிறது (எபி. 6:4–6; 10:26–29).

### *பிசாசு தாக்கும் மூன்று நிலைகள்*

தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் முதலில் நம்முடைய ஆவி, அடுத்து நம்முடைய ஆத்துமா, அதன் பின்பு நம்முடைய சரீரத்தின் மூலமும் கிரியை செய்கிறார். பிசாசு சரீரத்திலிருந்து வேலை செய்து, ஆத்துமாவை ஆதிக்கம் செலுத்தி, ஆவியை அடிமைப் படுத்துகிறான். மனிதர்கள் மீது சாத்தான் தொடுக்கும் ஒவ்வொரு தாக்குதலும், புலன் மண்டலத்திலேயே எப்பொழுதும் ஆரம்பிக்கப்படுகிறது. அவனுடைய ஒவ்வொரு சோதனை களிலும் இயற்கை மண்டலத்தில் உள்ள பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன. நாம் நம்முடைய ஐந்து புலன்களை தொடர்ந்து பாதுகாத்து வந்தால், சாத்தான் நம்மை தீமைக்குள் வசீகரிக்கத் தருணமே இல்லை.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

மனிதர்களை தங்கள் சொந்த சரீரத்தின் நாட்டத்திற்கும், பெருவிருப்பத்திற்கும் அடிமை யாக்குவதே முதல் நிலை தாக்குதல் ஆகும். ஏவாளின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது கண் வாசல் வழியாகவே. அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படதக்கதுமாய் இருக்கிறது என்று ஏவாள் கண்டாள் (ஆதி. 3:6). ஆகான் நேர்த்தியான பாபிலோனிய சால்வையையும், வெள்ளியையும், பொன்னையும் கண்டதினால் விழுந்துபோனான் (யோசு. 7:21). கண்களின் இச்சையினால் தாவீது இராஜாவும் விழுந்துபோனான் (2 சாமு. 11:2).

இயேசுவின் பசியை பயன்படுத்தி சாத்தான் அவரை சோதித்தான் (மத். 4:2, 3). அது வெற்றியடையாதபோது, ஐசுவரியத்தையும் உலக பொருட்களின் மகிமையையும் பயன்படுத்தி இயேசுவை சோதிக்க முயற்சித்தான் (மத். 4:8). இயேசுவும் நம்மைப் போலவே எல்லா நிலையிலும் சோதிக்கப்பட்டார், ஆயினும் அவர் பாவமில்லாதவராக இருந்தார் (எபி. 4:15). அளவில் குறைந்த மனிதர்கள், சாத்தான் தங்களைக் குறைத்து காட்டுமிராண்டிகளாய் மாற்ற அனுமதிக்கின்றனர்; தங்கள் சரீர இச்சைகளையும், விருப்பங்களையும் திருப்தி படுத்தவே வாழ்கின்றனர். அப்படிப்பட்ட மக்கள், தங்கள் சரீரத்திற்குள் அடிமைகளாக சிக்கிக் கொண்டதை போல நினைத்து, அமைதியான நேரத்திலும் மிகுந்த வேதனையை அனுபவிக்கின்றனர்.

இரண்டாம் நிலை தாக்குதல் ஆத்தும மண்டலத்தில் நடைபெறுகிறது. ஆத்துமாவின் பகுதிகளான சித்தம், உணர்வுகள் மற்றும் புத்தி ஆகிய ஏதேனும் ஒன்றின் வழியாய் ஆத்துமாவின் மேல் பிசாசு ஆதிக்கம் எடுக்க முயற்சிக்கிறான். சுய சித்தத்தின் சுதந்தரத்தையும், முதல் முயற்சியையும் மற்ற மனிதர்களை உபயோகித்து பிசாசு அடக்க முடியும். ஒரு ஆத்துமாவை பின்னடைவுக்குச் செல்ல வைத்துவிட்டால், அவைகள் வெற்றி பெற்றுவிடுகின்றன. பல பகுதிகளுக்கு இது கதவைத் திறந்து விடுகிறதினால், மெதுவாக தனது கட்டுக்குள் கொண்டுவந்து, ஆளுகை செய்கின்றன. ஒரு நபரின் உறவுகளில் உண்டாகும் கொடிய மாற்றங்கள் மற்றும் ஆபத்தான நிலைகள் மூலம், அவைகள் உணர்வுகளைத் தாக்குகின்றன. தவறான எண்ணங்கள், தவறான உபதேசங்கள் மற்றும் தவறான முடிவுகள் மூலம் பிசாசு புத்தியைத் தாக்குகிறது.

கடைசியாக மனிதனுடைய ஆவியை, பொய்யான தரிசனங்கள், வெளிப்பாடுகள் மூலம் பிசாசுகள் தாக்குகின்றன. அவைகள் சில சமயம் தேவனைப் போல தன்னை ஆள்மாறாட்டம் செய்து, வஞ்சிக்கப்பட்டவரிடம் கேட்கக் கூடிய சத்தத்தில் பேசுகின்றன. இவைகள் மக்களை வழிவிலகிப் போகச் செய்யும் வஞ்சிக்கிற ஆவிகள் (1 தீமோ. 4:1).

பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் தங்கள் வாழ்வில் இருப்பதால், கிறிஸ்தவர்கள் பிசாசின் தாக்குதல்களுக்கு பயப்படத் தேவையில்லை. பிசாசு உணர்வு இல்லாமல் அவர்கள் இருக்கலாம். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவ உணர்வோடு இருந்து, தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்க வேண்டும். தொடர்ந்து அந்நிய பாஷையில் பேசி, கர்த்தரை ஆராதித்து, தேவ வார்த்தைக்கு ஒத்ததாக பேசும் கிறிஸ்தவனைச் சுற்றித்திரிய பிசாசுகள் விரும்புவதில்லை.

கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதவரை, உண்மையாகவே அவர்கள் உன்னதமானவரின் மறைவில் இருக்கிறார்கள், அங்கு தீமை அவர்கள் கூடாரத் திற்கு வருவதில்லை. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் என்று பவுல் புத்தி சொல்லும் அதே பகுதியில்தான், பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தவும் வேண்டாம் என்று கூறுகிறார் (எபே. 4:26–30).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 3*

# விடுதலையின் வேதாகம முறைகள்

வேதத்தைவிட தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து, விடுதலைக்கான முறையை மக்கள் உண்டாக்கிக்கொள்வதால், விடுதலையாக்கும் ஊழியத்தில், அதிக சச்சரவுகள் எழும்பி இருக்கின்றன. சமச்சீர் நிலையில் தேவ வார்த்தை போதிக்கப்படாத இடங்களில், மிதமிஞ்சிய செயல் முறைகள் மேலோங்கி வருகின்றன. அனுபவத்தின் அடிப்படையில் உள்ள செயல்முறை, சீக்கிரமாகவோ தாமதமாகவோ, தெளிவான வேத போதனைகளுக்கு முரண்படும்; விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் நாமத்திற்கு இழுக்கைக் கொண்டவரும்.

*வேதவாக்கியத்திற்கு ஒவ்வாத விடுதலை முறைகள்*

மக்கள் தங்கள் பழைய வாழ்வை அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும் என்று சில ஊழியர்கள் வலியுறுத்துகின்றனர். தங்களை பின்பற்றுகிறவர்கள் அறிக்கையிட வேண்டிய வைகளுக்காக, சரிபார்க்கும் நீண்ட பட்டியலொன்றும் சில நேரங்களில் அவர்கள் வைத்திருக்கிறார்கள். விதி விலக்கில்லாமல் தங்களிடம் வரும் ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ள சரிபார்க்கும் பட்டியலில் உள்ளவற்றை படிக்க வேண்டும். மன்னிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தின் கீழ் வைக்கப்பட்ட பாவங்கள், மறதியின் கடலிலிருந்து இழுத்து வரப்படுகின்றன.

இவர்களுக்கு விருப்பமான வசனங்கள், முன்னோர்களின் பாவத்தினால் வரும் சாபத்தை முறிப்பதைக் குறித்தே இருக்கும் (யாத். 20:5). இந்த முறையில் உள்ள தவறு என்னவெனில், எல்லா சம்பவத்திற்கும் ஒரே முறைதான் உபயோகப்படுகிறது. சில சமயங்களில், ஒரு நபர் குறிப்பிட்ட சில பாவங்களை விட்டுவிடும் அறிக்கை செய்ய, நம்மை பரிசுத்த ஆவியானவர் நடத்துவார். மற்ற சமயங்களில், அறிக்கையிட வேண்டிய தேவை இல்லாமலே, விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரே ஒரு முறையை மட்டும் எடுத்து, அதை எல்லாருக்கும் தேவையானது என மாற்றுவது, நமக்கு தவறாக அமையும். இயேசு ஒருமுறை உமிழ்ந்து சுகப்படுத்தினார் என்றால், நாமும் எல்லா நேரங்களிலும் அதையே செய்ய வேண்டும் என்ற அர்த்தமில்லை. மற்றபடி நாம் ஒரு உமிழும் அல்லது துப்பும் ஊழியத்தில் நின்று விடுவோம். தேவ வார்த்தையை நேர்மறையாக அறிக்கையிடுவது மக்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும். ஆனால், அந்த ஒரே முறையை வைத்துக்கொண்டு ஊழியம் செய்வதின் மூலம், நாம் தேவனை மட்டுப்படுத்தக் கூடாது.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பிலிப்பி பட்டணத்திலிருந்த அடிமைப்பெண்ணிடம் இருந்து பிசாசைத் துரத்த, அவள் அறிக்கையிடுவது தேவையற்றதாயிருந்தது. அப்படியே உறுமால்கள், கச்சைகள் மூலம் விடுதலை வந்தபோதும் அறிக்கையிடுவது தேவைப்பட வில்லை (அப். 16:18; 19:12). இயேசுவும் பிசாசைத் துரத்துமுன், யாருக்கும் அறிக்கையிடும் பட்டியலை, எப்பொழுதும் வைத்ததே இல்லை (மத். 8:16).

சிலர் விட்டுவிட அறிக்கைசெய்ய வேண்டிய அவசியத்தை, நான் குற்றம் எனறு தீர்க்க வில்லை என்பதை தயவு செய்து கவனிக்கவும். மாறாக, பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் இல்லாமல், இந்த முறையை பகுத்தறியாமல் உபயோகிப்பதின் தவறையே சுட்டிக்காட்டுகிறேன். இந்த ஒரே முறையை மட்டும் உபயோகிப்பது, கிறிஸ்துவின் சரீரத்திற்கு விடுதலையைக் கொண்டு வருவதைவிட அதிக பாதிப்பையே கொண்டுவர முடியும். அது ஒரு மருத்துவர், ஒரு இயற்கை மருந்தையே எல்லா வியாதிகளுக்கும் உபயோகிப்பதை போன்றது. அல்லது

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

ஒரு ஊழியர் எல்லா மூட்டுவலிகளையும், மன்னிக்கமுடியாமலிருப்பதோடு சம்மந்தப்படுத்துவதைப் போன்றது. இந்த வகையான இறையியல் கொண்டுவரும் சேதத்தைக் குறித்து யோசியுங்கள்.

*பிசாசுகளுடன் வேதவாக்கியத்திற்கு ஒவ்வாத உரையாடல்*

வேதவாக்கியத்திற்கு ஒவ்வாத மற்றொரு பழக்கம் என்னவெனில், பிசாசுகளுடன் பேசுவதாகும். பிசாசுகள் பேச முயற்சித்தபொழுதெல்லாம், அவைகள் அமைதியாயிருக்கும்படி இயேசு எப்பொழுதும் கட்டளையிட்டார் (லூக். 4:41). பிசாசு கேட்டுக்கொள்ளப்படாத சில விளம்பரத்தை பவுலுக்காக செய்ய முயற்சித்தபோது, அவர் அதை விரும்பவில்லை (அப். 16:17, 18).

வியாதியஸ்தனை எப்படி நடத்தவேண்டும் என்று சில விடுதலையாக்கும் ஊழியர்கள் பிசாசு தரும் தகவல்களை சார்ந்து கொள்கிறார்கள். விடுதலையளிக்கும்போது, பிசாசுகளுடன் தாங்கள் பேசின உரையாடலை வைத்து, பிசாசின் மண்டலத்தைக் குறித்த உபதேசத்தையும், கோட்பாடுகளையும் உருவாக்கும் அளவிற்கு சிலர் சற்று அதிகமாகப் போகின்றனர். இவர்கள் சொல்லும் சாக்குபோக்கு என்னவென்றால், இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை பேசச் சொல்லி கட்டளைக் கொடுத்தால், பிசாசுகள் உண்மை பேசுவதை தவிர வேறு ஒன்றும் பேச முடியாது என்பதுதான். பிரச்சனை என்னவென்றால், இந்த பழக்கம் வேத வாக்கியங்களாலும் ஆதரிக்கப்படவில்லை, இயேசு அல்லது அவருடைய சீஷர்களில் வாழ்க்கையிலும் இது தெளிவாக இல்லை.

பிசாசு பொய்யனாயிருக்கிறான். அதேபோல் அவனுடைய சேனைகளும் இருக்கின்றன. இந்த பொய்யர்கள் தரும் எந்த தகவலையும் நாம் சார்ந்திருக்கக் கூடாது. பிசாசு பிடித்தவனை விடுதலையாக்கினபோது இயேசு பிசாசினுடன் உரையாடினதாக மாத்திரமே வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது (மாற். 5:7–13). இயேசு பிசாசை பன்றிகளுக்குள் போக அனுமதித்ததைப் பார்ப்பது எப்படி ஒரு நடைமுறையில்லையோ அப்படியே இதுவும் ஒரு விதி விலக்கான சம்பவமே.

சில விடுதலையாக்கும் ஊழியங்கள் செய்வது என்னவென்றால், விதிவிலக்கானவற்றை எடுத்து அதை ஒரு தரமாக அல்லது முன் மாதிரியாக்கிவிடுகின்றனர். அதைப்போல் அவர்கள் இயேசுவின் துப்பும் சம்பவத்தை எடுத்துக்கொண்டு எல்லோர் மேலும் காரி உமிழலாமே (அ) துப்பலாமே. அப்படிச் செய்வார்களானால் தேவன் அவர்களிடம் கருணையாய் இருப்பாராக. அல்லது பார்வையற்ற மனிதன் களிமண் பூசப்பட்டு சுகமானதை எடுத்துக்கொண்டு அவர்கள் களிமண் ஊழியம் ஆரம்பிக்கலாமே.

பிசாகுகளுடன் உரையாடுவதை வேதம் உற்சாகப்படுத்தவில்லை (மாற். 1:25, 34; லூக். 4:41). பிசாசுகளை வெளிப்பட வைக்கும் வேதத்தின் வழி என்னவென்றால், அவைகள் வெளிப்பட உற்சாகப்படுத்துவதோ அல்லது பேசுவதோ அல்ல, ஆனால் அபிஷேகத்தினால் தேவ வார்த்தையை பிரசங்கிப்பதின் மூலமே வெளிப்படவைக்க வேண்டும். அசுத்த ஆவி உள்ள மனிதன் பல ஆண்டுகளாக ஜெப ஆலயத்திற்கு வந்திருக்க வேண்டும். இயேசு தேவ வார்த்தையை பிரசங்கித்தபோது மாத்திரமே, அந்த பிசாசு வெளிப்பட்டது (மாற். 1:22, 23). பிசாசுகள், இயேசுவின் வாழ்க்கையிலிருந்த அபிஷேகத்தை அடையாளம் கண்டு கொண்டன (மாற். 5:6, 7; லூக். 4:41).

*வேதாகம விடுதலைக்கான திறவுகோல்*

எல்லா விடுதலையாகும் சம்பவத்திற்கும் திறவுகோல், உளவியல் ஆராய்ச்சிக் கொள்கையோ அல்லது உளவியல் சிகிச்சையோ அல்ல, ஆனால் விசுவாசம்தான். எல்லா பிசாசுகளும் பயத்தின் போஷாக்கை பெற்றுக்கொள்கின்றன. சாத்தான் செயல்படும் விதமே பயம்தான். மனிதர்களைப் பிடித்துகொள்ளும் பிசாசுகள் விரட்டப்படும்போது, எதிர்க்க தேவையான பெலத்தைப் பெற்றுக்கொள்ள, சுற்றுச்சூழலில் உள்ள பயத்தினாலே போஷாக்கைப்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பெற்றுக்கொள்கின்றன. அந்த காரணத்திற்காகவே, விடுதலையாக வரும்போது அவ்வளவு சந்தோஷமாக இருப்பதில்லை. பயப்படும் நூறு சீஷர்களை விட ஒன்று அல்லது இரண்டு விசுவாசிக்கும் சீஷர்கள் மேலானவர்கள். பயம் நிறைந்த சூழல், வேகமான சீக்கிரமான விடுதலைக்கும் உகந்தது அல்ல.

மக்களுடைய வாழ்விலிருந்து பிசாசுகளை வெளியேற்றும் முதன்மையான ஆவிக்குரிய வல்லமை, விசுவாசத்தின் வல்லமையே. விடுதலையாக்கும் ஊழியத்தில், வெற்றியில்லாத நிலையை சீஷர்கள் அனுபவித்தபோது, அவர்களுடைய அவிசுவாசத்திற்காக, அவர்களை இயேசு கடிந்து கொண்டார் (மத். 17:17). மாறாக, மிகப்பெரிய விசுவாசம் செயல்முறையில் காட்டப்படும்போது, மிகப்பெரிய தூரத்திலிருந்து கூட விடுதலையாக்க முடியும் (மத். 15:22, 28). அந்த கானானிய பெண்ணின் விசுவாசமே அவளுடைய மகளுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது.

பேசப்படும் வார்த்தையிலிருந்து, விசுவாசம் விடுவிக்கப்படுகிறது. வேதத்திலுள்ள விடுதலையாக்கும் ஊழியத்தின் திறவுகோல் பேசப்படும் வார்த்தையின் அதிகாரமே. பேசப்பட்ட இயேசுவின் வார்த்தைக்கே பிசாசுகள் பயந்து, கீழ்படிந்தன (மத். 8:16; மாற். 1:27; லூக். 4:36). நம்முடைய இருதயத்திலுள்ள விசுவாச நிலையைப் பொறுத்தே நம்முடைய பேசும் வார்த்தைகளின் வல்லமையும் இருக்கும் (மாற். 11:23). நம்முடைய இருதயத்திலுள்ள விசுவாச நிலை, நாம் உள் எடுத்துக்கொள்ளும் தேவ வார்த்தையின் அளவைப் பொறுத்தே இருக்கும் (ரோம. 10:17).

### *விடுதலையாக்கும் ஊழியத்தின் இரண்டு வாய்க்கால்கள்*

சுகமாக்கும் ஊழியத்தைச் செய்வதைப் போலவே, விடுதலையாக்கும் ஊழியத்திலும், இரண்டு அடிப்படை வழிகள் உள்ளன: நம்முடைய விசுவாசத்தின் மூலம் நமது அபிஷேகத்தின் மூலம். இயேசுவின் சீஷர்கள் பிசாசைத் துரத்த முடியாதிருந்த போது, இயேசு பிசாசு பிடித்த பையனின் தகப்பனுக்கு விசுவாசம் வர ஊழியம் செய்தார் (மாற். 9:24). சீஷர்களுக்கு விசுவாசம் இல்லாததினாலும் (மத். 17:19, 20), அந்த பையனின் அப்பாவிற்கு விசுவாசம் இல்லாததினாலும் (மாற். 9:24), வேடிக்கைப் பார்க்க கூடி வந்த ஜனத்திற்கு விசுவாசம் இல்லாததினாலும் (மாற். 9:19), எந்த விடுதலையும் உண்டாகவில்லை.

விடுதலையை அபிஷேகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும். அபிஷேகிக்கப்பட்டத் துணிகள் பிசாசு பிடிக்கப்பட்ட சரீரங்களைத் தொட்ட மாத்திரத்தில், ஒரே ஒரு கட்டளைகூட இல்லாமல் பிசாசுகள் பறந்தோடின (அப். 19:12). அபிஷேகத்தின் கீழ் பேசப்பட்ட ஒரே வார்த்தை, அநேகரிடத்திலிருந்த அசுத்த ஆவிகளை உடனே துரத்திற்று (மத். 8:16). அபிஷேகமே நுகத்தினை முறிக்கும் (ஏசா. 10:27). பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்தப் பட்ட பிரசன்னமும், தேவனுடைய வார்த்தையுமே, பிசாசுகளுக்கு வேதனை கொடுத்து அவைகளை அலைக்கழிக்க வைக்கின்றன (லூக். 4:18, 31–34, 41; 8:28).

### *பிசாசுகள் நாடோடிகள்*

சில ஊழியர்கள், பிசாசுகளைத் துரத்தும்போது, பாதாளத்திற்கு போகும்படி கட்டளைக் கொடுக்கின்றனர். அவைகளுடைய வேளை இன்னும் வராததினால், இது வசனத்திற்கு முரண்பட்டது. பிசாசுகள் துரத்தப்படும் போது, அவைகள் வேறே சரீரத்தை தேடி இந்த பூமியில் சுற்றித் திரிகின்றன (லூக். 11:24). 'வறண்ட இடங்கள்' என்று குறிப்பிட்டிருப்பது, தொடர்ந்து தாகமுள்ள நிலையைக் குறிக்கும். இதே நிலைதான், பாதாளத்திலுள்ள மரித்த ஆத்துமாக்களிடத்திலும் காணப்படுகிறது (லூக். 16:24).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பிசாசுகள் திரும்ப ஒரு சரீரத்திற்குள் நுழையக்கூடாது என்று கட்டளை கொடுக்கலாம் (மாற். 9:25). கிறிஸ்துவுக்குள் இராஜாக்களும் ஆசாரியர்களுமாய், நாம் வாழும் பகுதியிலும் நாட்டிலும், நாம் ஆளுகையையும், அதிகாரத்தையும் செலுத்தலாம். இதை நாம், நம்முடைய சட்ட அதிகாரத்திற்கு கீழ் உள்ள பகுதிகளில், பிசாசின் கிரியைகளைக் கட்டுவதன் மூலமும், அல்லது நம்முடைய பூகோள பகுதிகளிலிருந்து வெளியேறக் கட்டளைக் கொடுப்பதன் மூலமும் செய்யலாம் (வெளி. 1:6; மத். 16:19). நம்முடைய உபவாச ஜெப நேரங்கள், பிசாசின் முகாமில் மிகப் பெரிய சேதத்தை உண்டாக்க முடியும் (தானி. 10:2, 3, 12, 13; மாற். 9:29).

பிசாசுகளை பாதாளத்திற்கு போகும்படி கட்டளை கொடுப்பது, தேவனுடைய சட்ட அதிகாரத்தக்கு கீழ் உள்ளது. பிசாசுகள் வாழும் பகுதிகள் மேல் ஆளுகை எடுத்துக்கொள்ள போதுமான கிறிஸ்தவர்கள் எழும்புவார்களானால், இந்த தேவனில்லாத அந்நியர்களின் வாழ்க்கையை நாம் பரிதாபத்திற்குள்ளாக்க முடியும். உன்னதங்களிலுள்ள துரைத்தனங் களுக்கும், அதிகாரங்களுக்கும், அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் தெரியவருவது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது (எபே. 3:10). இயேசுவின் எல்லா வல்லமையும், அதிகாரமும் பிசாசின் தோல்வியை நடத்திக்காட்ட, சபைக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது (மத். 28:18; மாற். 16:17).

*மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து*

சில விடுதலையாக்கும் ஊழியங்களின் தவறு என்னவெனில், எல்லாப் பிரச்சனைக்கும் பிசாசுகளைக் குற்றஞ்சொல்வது ஆகும். அவர்களின் கீழ் கற்றுக்கொண்ட மக்கள், ஒவ்வொரு சிறிய பிரச்சனையையும் பிசாசோடு தொடர்புபடுத்துவார்கள். நியாயப்படி, அப்பொழுது அவர்கள் எல்லாம் பிரச்சனைக்கும் விடுதலை வேண்டும் என்று நம்புவார்கள். மாம்சத்தின் கிரியைகள், விடுதலையாவதின் மூலம் தீர்க்கப்பட முடியாது என்று வேதம் மிகத் தெளிவாக கூறுகிறது. மனந்திரும்புதலின் மூலமே இது தீர்க்கப்பட முடியும். மாம்சத்தின் ஆசை இச்சைகள் சிலுவையிலறையப்பட வேண்டுமே ஒழிய துரத்தப்பட முடியாது (கலா. 5:24).

சிந்தனையில் உள்ள அடிமைத்தனங்களையும் அரண்களையும், விடுதலை ஊழியத்தின் மூலம் தீர்க்க முடியாது. ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ் சிறைப்படுத்துவதன் மூலமே இவைகளை தீர்க்க முடியும் (2 கொரி. 10:4, 5). இப்படிப்பட்ட மக்களின் தேவை விடுதலை அல்ல, மாறாக மனது புதிதாக்கப்படுதலே (ரோம. 12:2). மனதை புதிதாக்கப்பட தேவையான போராயுதம் விடுதலை அல்ல. ஆனால், தேவ வார்த்தை (எபே. 5:26; 6:17). நம்மைச் சுத்திகரிப்பது அந்த வார்த்தையே (யோவா. 15:3).

முழு சுதந்தரத்திற்கும் விடுதலைக்குமான ஒரே காப்பீடு, விஷமுறிவு மருந்து, சூத்திரம், நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்திலுள்ள தேவ வார்த்தையே. தேவனுடைய வார்த்தை விடுதலையைப் பெற்றுக்கொள்கிறது மற்றும் தக்கவைத்துக்கொள்கிறது. தங்கள் வாழ்க்கையை வசனத்தின் மீது கட்டாமல், விடுதலையாக்கும் ஊழியம் என்றழைக்கப்படுபவைகளையே நம்பியிருப்பவர்கள் நிரந்தர முடிவு இல்லாத, எண்ணற்ற விடுதலையாக்கும் சிகிச்சைகளிலேயே வாழ்ந்துகொண்டிருப்பார்கள். சில விடுதலையாக்கும் ஊழியர்கள், தங்களுக்கே தொடர்ந்து விடுதலையாக்கும் சிகிச்சை தேவைப்படுகிறது என்று அவர்களே அறிக்கையிடுகிறார்கள்.

தேவனுடைய வார்த்தையை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் புகுத்தும் திறவுகோல் தேவ வார்த்தையை தியானிப்பது ஆகும். ஒடுக்குதல், ஆக்கிரமித்தல், பிடித்துக்கொள்ளுத லாகிய எல்லா நிலைகளும் ஒரு சிந்தனையின் விளைவாகவே இருக்கிறது; ஒரு மனிதனின் சிந்திக்கும் முறையே அவனை மனதிலும், சரீரத்திலும் கட்டிவைக்கிறது. விடுதலைக்குப் பின்பு, இப்படிப்பட்ட எண்ணங்களும், சிந்திக்கும் விதமும் அந்த நபரின்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வாழ்க்கையிலிருந்து நீக்கப்பட வேண்டும். அப்பொழுது நிரந்தர விடுதலை கிடைக்கும். தேவ வார்த்தையின் தியானமும், தேவ வார்த்தையில் இருந்துவரும் தெளிவான போதனையுமே இதைக் கொண்டு வரமுடியும்.

## *அத்தியாயம் 4*

# சிந்தனை வாழ்க்கை

சிந்தனை வாழ்வின் மண்டலமே, பிசாசு கிரியை செய்யும் செயல் எல்லையாகும். ஒடுக்குதல், ஆக்கிரமித்தல், பிடித்துக்கொள்ளுதல் ஆகிய எல்லா செயல்பாடுகளும், சிந்தனை வாழ்வில்தான் ஆரம்பிக்கின்றன. தவறான எண்ணங்கள், ஒரு சேனை போன்ற பிரச்சனை களை பிறப்பிக்கச் செய்கின்றன. மற்றும் பிசாசின் செயல்களுக்கு எரிபொருளாகவும் இருக்கிறன. நாம், நம்முடைய சிந்தனை வாழ்வைக் காத்துக்கொள்ள வேண்டும். மற்றும் இந்த மண்டலத்தில் பெலவீனங்கள் நேரிட அனுமதிக்கக் கூடாது.

### *சிந்தனையில் உள்ள அரண்கள்*

பிசாசின் தாக்குதல்கள் சோதனையோடு ஆரம்பிக்கிறது. ஒரு நபர் அந்த சோதனையை மனதில் ஏற்றுக்கொண்டு, அதில் தாபரித்தால், அது கற்பனையையும் பாதித்துவிடும். தவறான எண்ணங்களை தொடர்ந்தேர்ச்சையாய் கற்பனை செய்வது, சிந்திக்கும் ஒரு, முறை அமைப்பின் முன்னேற்றத்தை உருவாக்க வழிவகுக்கும். இந்த நிலையில், ஒரு நபரின் வாழ்க்கை பிசாசின் செய்கைகளால் பாதிக்கப்பட்டு, அவருடைய சில செயல்கள் பிசாசினால் தூண்டப்பட்டவைகளாக மாறுகின்றன. இந்த நிலையில், பிசாசுகள் அந்த நபரின் வாழ்வில் அரண்களைக் கட்டிவிடுகின்றன (2 கொரி. 10:4, 5).

எல்லா மனிதர்களும், மனிதகுமாரனாக இயேசுவும் சோதனையை அனுபவிக்கின்றனர். எனினும் அவைகளை நம் மனதில் ஏற்றக்கொள்வோ அல்லது நம்முடைய வாழ்வில் அரண் களைக் கட்ட அனுமதிக்கவோ தேவை இல்லை. பறவைகள் நம்முடைய தலையின் மேல் பறக்கலாம். ஆனால், அவைகள் உங்கள் முடியில் கூடு கட்ட விடாதீர்கள். இந்த காரணத்துக்காகவே நாம் ஒவ்வொரு நாளும் சில நேரம் தேவனுடைய வார்த்தையில் செலவழிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய சிந்தனை வாழ்க்கை தேவ வார்த்தையின்படி ஒரு, முறை அமைப்பிற்கு வரும்.

மாயவித்தைக்காரனாகிய சீமோன் ஒரு இளம் கிறிஸ்தவனாயிருந்தான் மற்றும் அவன் மறுபடியும் பிறந்த பிறகு, தேவனுடைய வார்த்தையில் அதிகமான போதனையைப் பெற்றிருக்கவில்லை (அப். 8:13). கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெறும்படி, பேதுருவும் யோவானும் எருசலேமிலிருந்து வந்து ஜெபித்தபோது, அவன் பணத்தைப் பயன்படுத்தி, பரிசுத்த ஆவியானவரைப் பகிர்ந்தளிக்கும் திறமையை வாங்கிக் கொள்ள விரும்பினான் (அப். 8:19). அவனுடைய தவறான சிந்தனையை பேதுரு கடிந்து கொண்டார் (அப். 8:20). உண்மையில், தவறான சிந்தனைக்கு மனந்திரும்புதல் அவசியமா கிறது (அப். 8:22). சீமோன் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தான், பேதுரு அதை, கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருப்பதாக கூறினார் (அப். 8:23).

அனனியாவும் சப்பீராளும், பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொன்னதினால் மரித்துப்போனார்கள் (அப். 5:3). அவர்கள், தங்கள் இருதயத்தில் அந்த திட்டத்தை உருவாக்கினார்கள் (அப். 5:4). அந்த சிந்தனை வாழ்க்கைதான் அவர்களை தவறு, வஞ்சகம் இவைகளுக்குள் நடத்தினது. முழு மனிதக்குலத்தின் மேலும், சிந்தனையின் மூலமே பிசாசு ஆளுகையை எடுத்துக்கொள்கிறது (எபே. 4:17; 2 கொரி. 4:4).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*சிந்தனை வாழ்வும் பிசாசுகளும்*

சாத்தான் நம்முடைய மனதை அறிந்துகொள்ள முடியாது. அவன் நம்மைக் குறித்த எல்லாத் தகவல்களையும், நம்முடைய உரையாடல்கள், செயல்கள், ஆவிக்குரிய பிரகாசம் அல்லது அது இல்லாமலிருந்தல் இவைகளின் மூலமே பெற்றுக்கொள்கிறான். சாத்தன் ஒவ்வொன்றையும் அறிய முடியாது. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவன் முற்றிலும் குழம்பியிருந்தான். ஒரு கட்டத்தில், அவன் பேதுருவை உபயோகித்து, இயேசு சிலுவைக்குப் போகாமல் தடுக்க முயற்சித்தான் (மத். 16:22, 23). இன்னொரு சமயம், அவன், இயேசுவை சீக்கிரமாகவே சிலுவைக்கு கொண்டுபோக, யூதாவை உபயோகித்தான் (யோவா. 13:27). சாத்தானின் சேனைகளும், இவைகளெல்லாம் எதைக்குறித்து என்பதை அறிந்திருக்கவில்லை. அறிந்தார்களானால், நம்முடைய கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாடார்களே என்று பவுல் எழுதினார் (1 கொரி. 2:8).

பிசாசு பிடித்திருந்தவன் விடுதலையானபோது, புத்தி தெளிந்திருந்தான் என்று வேதம் குறிப்பிடுவது மிக முக்கியமானது (மாற். 5:15). பிசாசு செயல்படும் எல்லா சம்பவங்களிலும், மனிதனுடைய மனதைப் பற்றிக்கொள்ளவே பிசாசுகள் வகை தேடுகின்றன. இந்த செயல்களை, இரண்டாம் நிலையிலுள்ள பிசாசுகளான, அந்தகார லோகாதிபதிகள் திட்டமிடு கின்றன. ஒரு ஆத்துமா சோதனைக்கு இணங்கும்போது, ஒரு குறிப்பிட்ட தருணத்தில் பிசாசு ஆத்துமாவுக்குள் நுழையும் வாய்ப்பை பெற்றுவிடுகிறான். பின்பு இந்த பிசாசு, ஆத்துமாவில் நுழைய மற்ற பிசாசுகளுக்கும் கதவைத் திறந்து கொடுக்கிறான்.

ஆத்துமாவுக்குள் நுழைவது சிந்தனை வாழ்வின் மூலமே. பிசாசுகள் வெளியில்வர கட்டளைக் கொடுப்பது மிகவும் எளிது. ஆனால், அவைகள் பயன்படுத்தின சிந்தனை வாழ்க்கையின் வாயிலை அடைப்பதற்கு அதிக நேரம் எடுக்கும். சரீரப் பழக்கங்களை நிறுத்திவிடுவது எவ்வளவு கடினமோ, அதைப் போலவே மனதின் பழக்கங்களை நிறுத்தி விடுவது கடினமாகும். ஒரு நபரை சிறைக்கம்பிகள் அடக்கி வைப்பதைவிட அதிக பலமாக மனதின் பழக்கங்கள் அடக்கி வைக்க முடியும். வாயில் அடைக்கப்படாவிட்டால், அந்த நபருக்குள் திரும்பி வர அவைகள் முயற்சிக்கும் (லூக். 11:24–26).

*விடுதலையின் வெளிப்பாடுகள்*

சில நேரங்களில், விடுதலையாக்கும் ஊழியர்கள், அதின் வெளிப்பாடுகளின் மூலம், பிசாசுகள் போய்விட்டதா என்று உறுதிசெய்ய வகை தேடுகின்றனர். பிசாசு போய்விட்டது என்று அவர்கள் நம்புவதற்கு முன்பாக வாந்தி எடுத்தல், வேகமாக மூச்சு விடுவது அல்லது அலறல்கள் போன்ற அறிகுறிகள் உள்ளதா என்ற பார்க்கிறார்கள். இது வேத வாக்கியங்களுக்கு ஒவ்வாததும், தேவ வார்த்தையில் உள்ள விசுவாசத்தில் அமைந்த ஊழியமாயிராமல், புலனறிவின் அடிப்படையில் அமைந்த ஊழியமாகும்.

சில சம்பவங்களில் சில வெளிப்பாடுகள் இருப்பதில் சந்தேகமில்லை. ஆனால், இது எல்லாவற்றிற்கும் பொதுவான உண்மை அல்ல. மிகமுக்கியமான வெளிப்பாடு என்ன வென்றால், அந்த நபர் புத்தி தெளிந்திருப்பதுதான் (மாற். 5:15). விடுதலையாக்கப்பட்ட நபர், பாவியினுடைய ஜெபத்தை செய்து, இயேசுவை தன்னுடைய இரட்சகர் என்று ஏற்றுக் கொள்ள முடிந்தால், பிசாசுகள் போய்விட்டன. அவர்களுக்கு இன்னும் ஒரு விடுதலை தேவையில்லை. அவர்களுக்கு உபதேசமே தேவை.

அவர்கள் மறுபடியும் பிறந்தபிறகு, அவர்களை பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத் திற்கு வழி நடத்துவது நல்லது. அது, அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக் கவும், அதினிமித்தம் பிசாசின் ஆவிகள், கிரியை செய்ய இடமளிக்காமல் இருக்கவும் உதவும். தொடர்ந்து உறுதியாக அந்நியபாஷையில் ஜெபிக்கும் ஒருவரை பிசாசுகள் சுற்றிக்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கொண்டிருக்க விடும்பாது. அது அவைகளை பைத்தியம் பிடிக்க வைக்கும். இதனுடன் தேவ வார்த்தையை தியானிப்பதைக் கூட்டிக்கொண்டால், உங்கள் பக்கத்தில் இருக்க பிசாசுகள் பயங்கர வேதனையடையும்.

### *விசுவாசியின் அதிகாரம்*

நமக்காக பிசாசுகளைத் துரத்தும்படி, தேவனிடம் ஜெபிப்பது வேதவாக்கியங்களுக்கு ஏற்றது அல்ல. பிசாசுகளைத் துரத்த எல்லா வல்லமையும், அதிகாரத்தையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். பவுல் தன்னிடமிருந்த பிசாசை நீக்கும்படி மூன்று முறை ஜெபித்தார். ஆனால், தேவனின் ஒரே பதில் 'என் கிருபை உனக்கு போதும்' என்பதே (2 கொரி. 12:7–9). அந்த சூழ்நிலையை மேற்கொள்ள பவுலுக்கு போதுமான கிருபையை கொடுத்திருக்கிறேன் என்று தேவன் சொன்னார் என்றார். அவருக்காக அதை வந்து செய்ய, பவுலுக்கு கர்த்தர் தேவை இல்லை. தானே அதை செய்ய தேவையான கிருபையைப் பெற்றுக் கொண்டார்.

நமக்காக பிசாசுகளைத் துரத்தும்படி நாம் தேவனிடம் கேட்க வேண்டும் என்று வேதத்தில் எங்கும் இல்லை. பதிலாக, நாம் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறோம் (மாற். 16:17). பிசாசின் வல்லமைகளை எதிர்த்து போரிட நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம் (எபே. 6:12). பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று நமக்கு சொல்லப்படுகிறது (யாக். 4:7). விழுங்கும் சாத்தானுக்கு எதிர்த்து நிற்கும்படி நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது (1 பேது. 5:8, 9).

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்காக பிசாசுகளைத் துரத்தும்படி தேவனிடம் கேட்க வில்லை. ஆனால், அவர்தானே இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தினார் (அப். 16:18). தேவன் தங்களுக்கு பகிர்ந்துகொடுத்த அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் வளர வேண்டும். நாம் செய்யும்படி தேவன் நமக்கு ஒப்படைத்ததை, அவர் நமக்காக செய்யமாட்டார். அவர் தம்முடைய அதிகாரத்தையும், வல்லமையையும், சபையின் மூலமாய் காட்ட விரும்புகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (எபே. 3:10).

பிசாசுகள் வெளியேறும்படி நாம் ஜெபிக்கிறதில்லை. அவைகள் வெளியேறம்படி அவைக ளிடம் நாம் கெஞ்சுகிறதுமில்லை. அவைகள் வெளியேற நாம் கட்டளை கொடுக்க வேண்டும். இயேசுவின் நாமத்தில் அவைகள் வெளியேற, நாம் அவைகளுக்கு கட்டளை கொடுக்க வேண்டும். எல்லா பிசாசுகளும் இயேசுவின் பெயரைக் கேட்டவுடன் பயந்து நடுங்குகின்றன (யாக். 2:19). அவைகள் பொய் சொல்லுபவைகள். மற்றும், வெளியேற அவைகளுக்கு கட்டளைக் கொடுக்கும்போது, அவைகள் போகாதது போலவும் நடிக்க முயற்சிக்கும். அவை களைக் கடிந்துக்கொள்ளுங்கள், அவைகள் வாயை மூடிக்கொண்டு வெளியேற சொல்லுங்கள். உங்களுடைய விசுவாசத்தை உபயோகியுங்கள் மற்றும் உங்கள் சொந்த வார்த்தையில் உள்ள அதிகாரத்தை விசுவாசியுங்கள் (மாற். 11:23).

### *விசுவாசத்தின் சாட்சிகள்*

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் என்பவர் தன்னுடைய விசுவாசத்தை விடுவித்து, பிசாசுகளைத் துரத்தும் விசுவாச மனிதனாய் இருந்தார். ஒருமுறை கன்சாஸ் பட்டணத்திலுள்ள, பிசாசு பிடித்த ஒரு பெண்ணிற்கு ஜெபிக்கும்படியாய் அவர் அழைக்கப்பட்டார். அவர் அந்த பட்டணத்தை அடைந்தபோது, அந்த பெண்ணில் இருந்த சாத்தானின் வல்லமை, அதினுடைய சாபங்களில் தீவிரமாயிருந்தது. இயேசுவின் நாமத்தில் பிசாசுகள் புறப்பட்டு போகும்படி அவர் கட்டளையிட்டார். பிறகு அவர் புறப்படத் தயாரானார். அவர் வாசல் வரை நடந்து வந்தபோது, அந்த பெண்ணும் பின்தொடர்ந்தாள், அவளுடைய வாயிலிருந்து பெருத்த அளவு சாபங்கள் வந்து கொட்டின.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

“நான் விசுவாசத்தின் ஜெபத்தை செய்யவில்லை; நான் திரும்ப போய் மறுபடியும் ஜெபித்தால் நல்லது” என்று அவர் சொல்லவில்லை. அப்படி செய்வது அவருக்கு தோல்வியாய் இருந்திருக்கும். அவர் கதவைத் தாண்டும் முன், அந்த பிசாசின் வல்லமை யிடம் “வெளியேறும்படி நான் உனக்குச் சொல்லுகிறேன்” என்று பெரிய அதிகாரத்தோடு சொன்னார். அதுவே போதுமானதாக இருந்தது. அந்த பெண் முழுவதும் விடுதலையானாள். மற்றும் பிசாசு அவளைத் திரும்ப பிடித்தக்கொள்ளவில்லை என்று அவளுடைய போதகர் பின்னர் கூறினார் (Smith Wigglesworth by Stanley H. Frodsham, Page 62).

கென்னத் E. ஹேகின், தன்னுடைய மூன்றாவது தரிசனத்தில் எப்படி கர்த்தர் அவருக்கு காட்சியளித்தார் என்றும், பிசாசு அவருக்கு கர்த்தராகிய இயேசுவுக்குமிடையில் எப்படி வந்தது என்றும் விளக்குகிறார். இயேசு ஏன் அசுத்த ஆவியை போகும்படி கட்டளைக் கொடுக்கவில்லை என்று சிறிது நேரம் ஆச்சரியத்துடன் காத்திருந்தார். முடிவில், அவர் எரிச்சலடைந்து, இயேசுவின் நாமத்தில் வாயை மூடிக்கொண்டு வெளியே போ என்று பிசாசிடம் சொன்னார். அப்பொழுது இயேசு கென்னத் எதுவும் செய்திருக்கவில்லை என்றால், அவரும் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். சாத்தானின் மீது அதிகாரத்தை அவருடைய சபைக்கு ஒப்படைத்துவிட்ட காரணத்தினால் அவரால் ஒன்றும் செய்ய முடியாது. (I believe in visions by Kenneth E. Hagin, Fleming H. Revell Publishers, Pages 80-84).

கிறிஸ்தவர்களே, எழுந்திருங்கள் ஆளுகையை எடுத்துகொள்ளுங்கள். இயேசு செய்த கிரியைகளையும், அதைவிட பெரிய காரியங்களையும் கூடச் செய்யக் கூடிய மிகப் பெரிய வேலையை தேவன் உங்களுக்கு தந்திருக்கிறார். எல்ல அதிகாரமும், ஆளுகையும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது திரும்ப தாக்கப்படுவோமோ அல்லது எதிரியிடமிருந்து கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டுமோ என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை ஏனெனில் சர்பங்களையும், தேள்களையும் (பிசாசின் அடையாளங்கள்) மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டது என்று இயேசு கூறினார் (லூக். 10:19).

உன்னதமானவருடைய மறைவில் நாம் தங்குகிறபடியால், பொல்லாப்பு நமக்கு நேரிடாது வாதை நம்முடைய கூடாரத்தை அணுகாது (சங். 91:1, 10). விடுதலையாக்கும் ஊழியத்தை முதலில் நான் ஆரம்பித்தபோது, பிசாசுகள் கண்டிப்பாக திரும்பதாக்கும். இது ஆபத்தானது போன்ற எண்ணற்ற எச்சரிப்புகள் மூத்த ஊழியங்களால் எனக்குக் கொடுக்கப்பட்டன. பிரச்சனை என்னவெனில் அவர்கள் அறிவுரைகள் தேவ வார்த்தையுடன் ஒத்து வரவில்லை.

வசனத்தை நான் ஆராய்ந்தபோது, நாம் பிசாசுகளுக்கு பயப்படுவதைக் காட்டிலும், அவைகள் நமக்கு பயப்படுகின்றன என்பதை உணர்ந்து கொண்டேன். பிசாசுகளை எதிர்கொள்வதில் நமக்குள்ள அடிப்படை பிரச்சனை என்னவென்றால், அவைகள் திரும்ப தாக்கும் என்பதைவிட, நம்முடைய சொந்த பயமே அதிகம். பயமே கதவுகளை திறக்கிறது பயத்திற்கு மருந்து விசுவாசம்தான், அது தேவ வார்த்தையை தியானிப்பதால் வருகிறது.

என்னுடைய சாட்சி என்னவென்றால், சாத்தானுடைய எல்லா தாக்குதல்களுக்கும் நீங்கள் எதிர்ப்புசக்தி உடையவர்களாக இருக்க முடியும். எல்லா கிறிஸ்தவர்களும் உற்சாகமடைந்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை உரிமை கொள்ளவும், மக்களுடைய வாழ்விலிருந்து பிசாசையும், அவனுடைய சேனையையும் களைந்தெடுக்க தைரியங்கொள்ளவும் இதை நான் பகிர்ந்து கொள்கிறேன். மற்றவர்களுடைய பயங்களுக்கு செவிசாய்க்காதீர்கள். தேவனுடைய வார்த்தையை கவனியுங்கள். புறப்பட்டு போய் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தும் படி இயேசு கட்டளை கொடுக்கிறார் (மாற். 16:17).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 5*

# தேவதூதர்களின் வேலைகள்

நாம் ஆவிக்குரிய உலகத்தை எதிர்கொள்ளும்போது, பிசாசுகளை விட தேவனையும் அவருடைய தேவதூதர்களையும் குறித்து அதிக உணர்வுள்ளவர்களாய் இருப்பது மிக முக்கியமானது. சாத்தானோடு வேலை செய்யும் பிசாசுகளை விட, நம்மோடு வேலை செய்யும் தேவதூதர்களே அதிகம். நம்மோடு சேர்ந்து ஊழியம் செய்யும்படியாய் தேவ தூதர்கள், தேவனால் அனுப்பப்படுகிறார்கள். தேவதூதர்களோடு சேர்ந்து வேலைசெய்வதற்கான ஆவிக்குரிய விதிகளை நாம் கற்றுக்கொள்வது அவசியமாகிறது.

### *பாதுகாக்கும் தேவதூதர்கள்*

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது, அவனுடைய வாழ்க்கையை கண்காணிக்கும் படியாக, தேவன் ஒரு பாதுகாக்கும் தேவதூதனை ஏற்படுத்துகிறார். இந்த தேவதூதர்கள் சட்டப்படி எவ்வளவு முடியுமோ அந்த அளவு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை பாதுகாக் கின்றனர். பரலோகத்தில் பரமபிதாவின் முகத்தை எப்போதும் தரிசிக்கும் பாதுகாக்கும் தேவ தூதர்களைப் பற்றி இயேசு பேசுகிறார் (மத். 18:10). சிறைச்சாலையில் இருக்க வேண்டிய பேதுரு வாசற்படியில் நிற்பதை அந்த வேலைக்கார பெண் கண்டபோது, அந்த வீட்டில் இருந்த கிறிஸ்தவர்கள் அது அவருடைய பாதுகாக்கும் தேவதூதனாயிருக்கலாம் என்று நினைத்தார்கள் (அப். 12:15).

எனினும், பெற்றோர் தங்களுடைய விருப்பம்போல் பிள்ளைகளை தவறான ஆராதனைக்கு விட்டுக்கொடுக்கும்போதும், அல்லது அவர்களே மனதார பிசாசை தங்கள் குடும்ப வாழ்க்கைக்குள் வரவேற்கும்போதும், பாதுகாக்கும் தேவதூதனுடைய சட்ட உரிமை கடுமையாக கட்டுப்படுத்தப்படுகிறது.

நாமே மனமுவந்து நடக்க தெரிந்தகொள்ளும் அபாயகரமான பகுதிகளில் நாம் நுழை வதை தேவதூதர்களால் தடுக்க முடியாது. நம்முடைய சுயசித்தத்தால் தெரிந்துகொள்ள முடியாத பகுதிகளை மட்டுமே அவர்கள் மறைப்பார்கள். தேவனைப் போலவே, தேவதூதர் களும் நம்முடைய சுயதெரிந்தெடுப்பிற்கு எதிராக வேலைசெய்யவோ அல்லது மீறவோ முடியாது.

ஆயினும், நம்முடைய வாழ்க்கையின் பகுதிகளுக்குள் திறந்தமனதோடு அவர்களை வரவேற்க தெரிந்துகொள்வோமானால், அவர்கள் வேலை செய்வதற்கு விஸ்தாரமான பகுதி இருக்கும். திறந்த மனதோடு அவர்களை வரவேற்கும் நம்முடைய சுயதெரிந் தெடுப்பு, நம்முடைய வாழ்க்கையின் காரியங்களில் நன்மைக்காக குறுக்கிட அவர்களுக்கு சட்டபடி உரிமை தருகிறது. ஆபிரகாமுக்கு, தன்னுடைய வாழ்க்கையின் காரியங்களில் தனக்கு உதவி செய்யும் தேவதூதனைக் குறித்த விழிப்புணர்வு இருந்தது (ஆதி. 24:7). யாக்கோபும், எல்லா தீங்குக்கும் நீங்கலாக்கி தன்னை மீட்டவர் தேவதூதனே என்று ஒப்புக்கொள்கிறார் (ஆதி. 48:16).

ஒரு மனிதன் பெரியவனாக வளரும்போது, தீமைசெய்ய சுயமாய் தெரிந்தெடுப்பது, பாதுகாக்கும் தேவதூதன் அவனுக்காக வேலை செய்வதைத் தடுக்கும். ஆனால், அவன் தேவனுடைய பக்கமாய் திரும்பி, அவரோடு ஆழமான உறவு வைத்துக்கொள்வதை தேடுவா னானால், அவனுடைய பாதுகாக்கும் தேவதூதன், இன்னும் அதிகமாய் செயலாற்ற இயலும். பேதுருவை அழைத்தனுப்பும்படி கொர்நெலியுவுக்கு அறிவுரை கொடுத்தது, அவனுடைய பாதுகாக்கும் தேவதூதனாய் இருந்திருக்கலாம் (அப். 10:3).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*கொடுக்கப்பட்ட வேலையில் தேவதூதர்கள்*

வேதத்தில் வெவ்வேறு நேரங்களில் தேவதூதர்கள் வெளிப்படுவதுபோல காணப்பாட்டாலும், அவர்கள் இன்னும் ஒருநாளின் இருபத்து நான்கு மணிநேரமும் மறைமுகமாக வேலைசெய்து கொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் நமக்கு வெளிப்படும் நேரங்கள், பிதாவின் அனுமதியோடு வரும் சிறப்பான தருணங்கள் ஆகும். அவர்கள் எல்லா நேரங்களிலும் வெளிப்படாவிட்டாலும், இன்னும் அவர்கள் வேலை செய்துகொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் வெளிப்பட்ட நேரங்களைக் குறித்த ஆராய்ச்சி, அவர்கள் மனிதர்களுக்கு செய்த வேலைகளை நமக்கு காட்டும்.

தேசங்கள் யுத்தத்திற்கு போகும்போது, தேவதூதர்களும் பிசாசுகளும் யுத்தத்திற்கு போகின்றன. ஆவிக்குரிய மண்டலத்தில், தேவதூதசேனையின் அதிபதி யுத்தத்தை நடத்தி செல்வதை யோசுவா கண்டான் (யோசு. 5:14). மோசேயையும், இஸ்ரவேலர்களையும் வனாந்திரத்தில் நடத்திச்செல்ல தேவன் ஒரு தேவதூதனை அனுப்பினார் (யாத். 23:20, 23)). உண்மையாகச் சொல்லப்போனால் ஒரு தேவதூதன்தான் வனாந்திரத்தில் மோசேக்கு தரிசன மானார் (யாத். 3:2; அப். 7:30). அமலேக்கியரோடு நடந்த யுத்தத்தில், மோசேயின் உயர்த்தப் பட்ட கைகள், யோசுவாவுக்கு உதவும்படி தேவதூதர்களை விடுவித்தது என்று நான் நம்புகிறேன் (யாத். 17:8–16).

நவீனகால யுத்தகளங்களிலும், தேவதூதர்களுடைய வேலைதான் தீர்மானமான வெற்றியை கொண்டுவருகிறது. யுத்தங்களில் தேவதூதர்கள் உதவியதைக் குறித்த சாட்சிகள் ஏராளம் (Hand in Helm by Katherine P. Carter) எசேக்கியா ராஜாவின் நாட்களில் அசீரியருடைய முழு இராணுவத்தையும் ஒரு தேவதூதன் அதம்பண்ணினான் (2 நாளா. 32:21).

தேவையுள்ள நேரங்களில், தேவதூதர்கள் மளிகைப் பொருட்களையும், ஆகாரப் பொருட் களையும் கொண்டுவருகிறார்கள். இயற்கைக்கு அப்பாற்பட்ட உணவை எலியாவிற்கு ஒரு தேவதூதன் கொண்டுவந்தான் (1 இராஜா. 19:5). இஸ்ரவேலர்கள், நாற்பது வருடம் சாப்பிட்ட மன்னா, உண்மையாகவே தேவதூதர்களுடைய உணவாயிருந்தது (சங். 78:24, 25). நாற்பது வருடத்திற்கு, ஒவ்வொரு காலையிலும் மன்னாவை அங்கு வைக்க தேவதூதர்கள் பொறுப்பாய் இருந்ததற்கு சாத்தியமுண்டு.

ஊழியத்தில் தேவனுடைய மனிதர்களோடு தேவதூதர்கள் நேரடியாக வேலை செய்கிறார்கள். தேவதூதர்களோடு நெருக்கமாக வேலை செய்த தீர்க்கதரிசியாக எலியா காணப்படுகிறார். அவர் சோர்ந்து போனபோது ஒரு தேவதூதன் அவரை உற்சாகப்படுத்தினான் (1 இராஜா. 19:7). அவரிடத்தில் அனுப்பப்பட்ட தேவதூதனோடு அவர் நெருக்கமாக வேலை செய்கிறார் (2 இராஜா. 1:3, 15). சகரியா தீர்க்கதரிசி, தேவதூதர்களுடன் பலமுறை உரையாடியிருக்கிறார் (சக. 4:1; 5:10; 6:4).

நவீனகாலத்தில் வில்லியம் பிரன்ஹாம் தேவதூதர்களோடு கூட சுகமாக்கும் ஊழியத்தில் வேலை செய்திருக்கிறார் (A Man Sent from God by Gordon Lindsay). {இந்த புத்தகம் இப்போது விநியோகத்தில் இல்லை. ஏனெனில் சுவிசேஷகராகவும், தீர்க்கதரிசியாகவும் அழைக்கப்பட்ட வில்லியம் பிரன்ஹாம், போதகருடைய ஊழியத்தில் நுழைந்து, பல தவறான உபதேசங்களில் முடிவடைந்தார். தேவனுடைய அனுமதிக்கப்பட்ட சித்தத்தினால், அவர் ஒரு விபத்தில் மரித்தார். இன்றும் அவருடைய சீடர்களில் சிலர், அந்த தவறான போதனையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுள்ளனர். எனினும் அவருடைய ஆரம்ப ஊழியத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முற்போக்கான சில காரியங்கள் இன்னும் இருக்கின்றன}.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

தேவனுடைய மனிதர்களுக்கு தேவதூதர்கள், வெளிப்பாடுகளைக் கொண்டுவருகின்றனர். பிரதான தூதனாகிய காபிரியேல், தானியேலுக்கு வெளிப்பாட்டைக் கொண்டுவரும்படி தேவனால் விசேஷமாய் அனுப்பப்பட்டார் (தானி. 9:22). சகரியாவின் தரிசனங்களைப் பற்றி அவருக்கு விளக்கமளித்தது ஒரு தேவதூதனே (சக. 1:9; 4:4; 5:2, 6). எல்லா வெளிப்பாடு களும், எந்த வழியில் பெறப்பட்டாலும், அவைகள் எழுதப்பட்ட தேவ வார்த்தையோடு ஒத்திருக்க வேண்டும் என்பதை இங்கு கவனிப்பது முக்கியமாகும்.

பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு எதிரிடையான ஒரு சுவிசேஷத்தை ஒரு நபரோ அல்லது தேவதூதனோ பிரசங்கித்தால், அந்த நபரோ அல்லது தேவதூதனோ புறக்கணிக்கப் பட வேண்டும் என்று பவுல் கூறினார் (கலா. 1:8). நாம் தேவதூதர்களை ஆராதிக்கவும் கூடாது (கொலோ. 2:18). சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்ள முயற்சிப்பான் (2 கொரி. 11:14). தேவதூதர்கள் மூலம் பெறப்படும் எல்லா வெளிப்படுத்தல் களும், வெளிப்பாடுகளும், எழுதப்பட்ட தேவவார்த்தையின் மூலமாகவும், உள்ளான சாட்சியின் மூலமாகவும், பிரதிபலனாகிய கனியின் மூலமாகவும் சரிபார்க்கப்பட வேண்டும்.

ஊழியத்தின் வெவ்வேறு நிலைகளில், கர்த்தராகிய இயேசுவை தேவதூதர்கள் திடப்படுத்தி இருக்கிறார்கள். நாற்பது நாட்கள் இரவும் பகலும் சாத்தானால் சோதிக்கப்பட்ட பின்பு, தேவ தூதர்கள் வந்து அவருக்கு ஊழியஞ்செய்தார்கள் (மாற். 1:13). கெத்செமனேயில் அவர் மிகவும் வியாகுலப்படும்போது, தேவன் ஒரு வல்லமையான தூதனை அனுப்பி இயேசுவை திடப்படுத்தினார் (லூக். 22:43). இயேசுவின் பிறப்பின்போதும், உயிர்த்தெழுதலின்போதும் தேவதூதர்கள் வெளிப்பட்டார்கள் (லூக். 1:30; 2:9, 10; யோவா. 20:12).

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், அப்போஸ்தலர்கள் தேவதூதர்களோடு கூட வேலை செய்திருக்கிறார்கள். ஒரு தேவதூதன் இரண்டுமுறை அவர்களை சிறைச்சாலையில் இருந்து விடுவித்திருக்கிறான் (அப். 5:19; 12:7, 8). சபையை துன்பப்படுத்தின ஏரோதை கர்த்தருடைய தூதன் அடித்தான் (அப். 12:23). பவுலின் ஊழியங்கள் முழுவதிலும் தேவதூதர்களின் பாதுகாப்பு அவருக்கு இருந்தது மற்றும் அவர் கப்பற்சேதத்தில் இருந்தபோது தேவதூதன் அவருக்கு தரிசனமானான் (அப். 27:23). கப்பற்சேதத்திலிருந்த இருநூற்று எழுபத்தி ஆறு பேரும், தேவ தூதர்கள் வேலை செய்ததால், பத்திரமாக கரைக்கு கொண்டு வரப்பட்டார்கள் (அப். 27:24, 37).

கடைசி நாட்களில், தேவதூதர்களின் அதிகமான வெளிப்படுதலை நாம் காண எதிர் பார்க்கலாம். வேதவாக்கியத்திற்கு அப்பாற்பட்ட ஒவ்வொரு வெளிப்பாடுகள், வெளிப்படுத்தல் கள் மூலம் வஞ்சிக்கப்படாதிருங்கள். ஆனால், உங்கள் வாழ்கையில் தேவதூதனுடைய வேலையை ஏற்றுக்கொள்ள தயாராக இருங்கள். தூதர்களோடு சேர்ந்து வேலை செய்ய கற்றுக்கொள்ளுங்கள். தேவ வார்த்தையில் சமச்சீர்நிலையில் இருங்கள். வேதவாக்கியங் களுக்கு ஏற்ற எல்லா காரியங்களையும் ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்.

*தேவதூதர்களை செயல்பட தூண்டும் கொள்கைகள்*

நம்முடைய வாழ்வில் தேவதூதர்களின் வேலையை செயல்பட தூண்டும் கொள்கைகள் இருக்கின்றன. நம்முடைய வாழ்வில் உள்ள இருண்ட பகுதிகளில் (நாமாகத் தெரிந்து கொள்ள முடியாத பகுதிகள்) தேவதூதர்கள் தானாகவே வேலை செய்துவிடுவார்கள். ஆனால், நாம் சுயமாகத் தெரிந்துகொள்ளும் பகுதிகளின் எல்லைக்குள் தேவதூதர்கள் கிரியை செய்வது, நாம் தேவனுடைய கொள்கைகளுக்கு கீழ்ப்படிவதை பொறுத்துதான் அமைகிறது.

கர்த்தருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்க தேவதூதர்கள் விரும்புகின்றனர் (சங். 34:7). இது செம்மையும், நீதியுமான வாழ்க்கையைக் குறிக்கிறது. தேவனைத் தங்கள் கோட்டையாகவும், நம்பிக்கையாகவும் கொண்டிருக்கிறவர்களை தேவதூதர்கள் பாதுகாக் கின்றனர் (சங். 91:11). எல்லா நேரங்களிலும், தேவதூதர்கள் உங்களைச் சூழ பாளயமிறங்கி

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

இருப்பதை நீங்கள் வாஞ்சிப்பீர்களானால், தேவனை உங்கள் தாபரமாகக் கொண்டு, சர்வ வல்லவருடைய நிழலில் தங்குங்கள் (சங். 91:1). இது தேவனுக்குக் காத்திருப்பதையும் அவருக்கு ஊழியம் செய்வதையும் உள்ளடக்கும். தேவதூதர்கள் தேவனை ஆராதிப்பதை நேசிக்கிறார்கள். உண்மையாக தேவனை ஆராதிக்கிறவர்கள், தேவதூதர்கள் தங்களைச் சூழ்ந்திருப்பதைக் காண்பார்கள். ஆவிக்குரிய உலகில் ஒத்த குணமுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் ஈர்ப்பார்கள்.

உபவாசமும் ஜெபமும் தேவதூதர்களை நமக்கு உதவி செய்ய தூண்டுகிறது. தானியேல் உபவாசிக்கத் தொடங்கின முதல்நாளே, தேவன் அவர் விண்ணப்பத்தைக் கேட்டு, காபிரியேலை அனுப்பினார் என்று காபிரியேல் தானியேலிடம் கூறுகிறார் (தானி. 10:12). சபையார் தொடர்ந்து பேதுருவிற்காக ஜெபித்தபோது, அவரை சிறைச்சாலையில் இருந்து விடுவிக்க ஒரு தேவதூதன் வந்தார் (அப். 12:5–7). ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக, அசீரியர்களை அழிக்க தேவன் தேவதூதர்களை அனுப்பினார் (2 இராஜா. 19:15, 35). தானியேலின் ஜெபங்கள், காபிரியேல் துரிதமாய் பறந்து வர உதவிற்று (தானி. 9:21).

நீங்கள் பேசும் வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள். உங்கள் வார்த்தை ஒன்று பிசாசுகளோ அல்லது தேவ தூதர்களோ கிரியை செய்ய சட்ட உரிமை அளிக்கும். நீங்கள் நீதிமான் என்றோ குற்றவாளி என்றோ, நீங்கள் பேசும் வார்த்தைகளாலேயே தீர்க்கப் படுவீர்கள் (மத். 12:36, 37). வார்த்தைகளாலேயே இயற்கையின் சக்கரத்தை ஆளுகிறதாய் இருக்கிறது (யாக். 3:6). உன் வார்த்தைகளின் நிமித்தம் வந்தேன் என்று காபிரியேல் தானியேலிடம் கூறுகிறார் (தானி. 10:12). உங்களுக்காக தேவதூதர்கள் ஊக்கமாக வேலை செய்ய வேண்டுமானால் தேவ வார்த்தைக்கு ஒத்திருக்கும் வார்த்தைகளைப் பேசுங்கள்.

ஆராதனையிலும், ஜெபத்திலும், தேவ வார்த்தையிலும் விருத்தியடையுங்கள். இந்த மூன்று கொள்கைகளும், மிகப்பெரிய அளவில் தேவதூதர்களின் செயல்பாட்டை நம்முடைய வாழ்வில் கொண்டுவரும். கிறிஸ்தவர்களுக்குள் சாத்தானின் உணர்வைக் காட்டிலும், தேவனைக் குறித்தும் அவருடைய தூதர்களைக் குறித்ததுமான உணர்வைக் கட்டி எழுப்புவதே இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும். சாத்தானின் உபதேசத்தைக் குறித்த எந்த போதனையும், தேவதூதர்களின் போதனையில்லாமல் போதுமானதாக இருக்காது. எதிரியின் முகாமிற்குள் என்ன நடக்கிறது என்பதைக் கற்றுக்கொண்டபின், நம்முடைய சொந்த முகாமில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

சாத்தான் மற்றும் பிசாசுகளைக் குறித்த எல்லா பயங்களும் கிறிஸ்தவ வாழ்க்கையில் இருந்து முற்றிலும் நீக்கப்பட வேண்டும். சாத்தானுக்காக வேலை செய்யும் பிசாசுகளை விட, நம்மோடு வேலை செய்யும் தேவதூதர்கள் மிக அதிகம். நாம் அவைகளை எண்ணிக்கையில் மிஞ்சுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மோடும், நமக்குள்ளும் சர்வவல்ல தேவனாகிய பிதாவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் இருக்கிறார்கள். தேவன் நம்மடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம. 8:31).

கிறிஸ்தவ போர்ச்சேவகர்களே, அணிவகுத்து முன்னேறிச் சென்று ஆளுகையை எடுத்துக்கொள்வோம். எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பாதங்களுக்கு கீழாகக் கொண்டுவருவோம் (1 கொரி. 15:25; எபே. 1:22, 23). இயேசுகிறிஸ்துவே கர்த்தரென்று முழங்கால் யாவும் முடங்கட்டும், நாவு யாவும் அறிக்கையிடட்டும் (பிலி. 2:9–11).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 